விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 09 ஞாயிற்றுக்கிழமை (25.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 218

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெ

# பொது மக்களின் கட்டிடங்களிலிருந்து படையினர் விரைவில் வெளியேறுவர்

## இராணுவத் தளபதி உறுதிபடத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



வடக்கில் புதிய நிரந்தர இராணுவ முகாம்களை நிறுவும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதனால் தனியார் கட்டிடங்களில் நிலை கொண்டுள்ள படையினர் அக் கட்டிடங்களிலிருந்து வெளியேறும் செயற்பாடுகளும் துரிதமடைந்துள்ளன என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க்கைதிகள் மீது சிறைக்காவலர்களும், சிங்கள கைதிகளும் தாக்குதலை நடத்தி வருவதாக சிறைச்சாலையில் உள்ள தமிழ் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை சிறைக்காவலர் ஒருவர் தமிழ்க் கைதி மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதனையடுத்து அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 380 தமிழ் கைதிகளும் ஆட்சேபனை தெரிவித்ததை தொடர்ந்து தமிழ்க் கைதிகள் மீது சிங்கள கைதிகள் தாக்குதல் நடத்தியதாகவும் தற்போது இந்தத் தாக்குதல் தொடர்வதாக சிறைக் கைதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள கைதிகள், தமிழ்க் கைதிகள் மீது தாக்குதலை

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழருக்கு நீதி கோரி லண்டனிலிருந்து ஜெனிவா வரை நீண்ட நடைப்பயணம் ஆரம்பம்

(லண்டன்)

இலங்கை அரசுகளால் கடந்த 30 வருட காலத்திற்கும் மேலாக ஈழத்தமிழர்கள் எதிர் நோக்கிவரும் பிரச்சினைகளை உலக மயப்படுத்தும் நோக்குடனும் ஐ.நா. சபை ஈழத் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்கின்ற கோரிக்கையுடனும் கூடிய மனித நேய நீண்ட நடைப்பயணம் ஒன்று நேற்று இரவு பிரித்தானியாவில் ஆரம்பமானது.

லண்டனிலிருந்து சுவிட்சர்லாந்து தலைநகர் ஜெனிவா வரை இந்நீண்ட தூர நடைப் பயணம் மேற்கொள்ளப்படுகின்றது.

இடம் பெயர்ந்த நாடுகளில் உள்ள ஈழத் தமிழ் அமைப்புக்களினதும், புலம்பெயர் தமிழர்களினதும், ஆதரவில் ஈழத்தமிழ் இளைஞன் சிவந்தன் தலைமையில் இப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அவர் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. தலைமையகத்தின் முன்பாக இந் நடைப்பயணப் போராட்டத்தை நிறைவு செய்து கொள்வார். 1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தை நினைவு கூர்ந்து பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு அருகே உள்ள விக்டோரியா மலர்ச் சாலையில் நேற்று இரவு மாபெரும் பேரணி கூட்டம் முதலில் இடம் பெற்றது.

இலங்கை அரசின் மீது போர்குற்ற விசாரணை மேற்கொள்ள வேண்டும், தடுப்பு முகாம்களில் உள்ள போராளிகள், பொது மக்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். முகாம்களில் உள்ளவர்களை பார்வையிட அனுமதிக்க வேண்டும். மனித உரிமைகளை மதிக்கும் வரை இலங்கையை புறக்கணிக்க வேண்டும்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு மரணத்தில் யாழ்ப்பாணம் 3ஆம் இடம்

(கொழும்பு)

இந்த வருடம் 22159 பேர் இலங்கையில் இதுவரை டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இவர்களில் 164 பேர் இறந்து விட்டார்கள் என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக டெங்கு மரணங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் இம் மாவட்டத்தில் 45 பேர் டெங்குக்கு பலியாகியிருக்கின்றார்கள் என்றும் அமைச்சின் உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவித் திருக்கின்றன.

கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில்

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியில் இணையமாட்டேன் விஜயகலா மகேஸ்வரன் உறுதி

(யாழ்ப்பாணம்)

ஆளும் கட்சியில் இணைப் போவதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமது கணவர் மகேஸ்வரன் உயிருடன் இருந்த காலத்தில் தமது யாழ்ப்பாண இல்லத்திற்கு ஆளும் கட்சி அமைச்சர்கள் விஜயம் செய்துள்ளனர்.

வடக்கிற்கு விஜயம் செய்யும் ஆளும் கட்சி அமைச்சர்கள் பலாலி வீதி கந்தர் மடத்தில் அமைந்துள்ள அமரர் மகேஸ்வரனின் இல்லத்திற்கு விஜயம் செய்வதாக அண்மையில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.

(19ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர இராணுவ முகாமுக்கு சீனா ஒத்துழைப்பு வழங்கும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைப்பதற்கு சீனா ஒத்துழைப்பு வழங்கி வருவதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத நடவடிக்கைகள் மீள தலைதூக்காமல் தடுக்கும் நோக்கில் இவ்வாறு வடக்குக் கிழக்கில் நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைப்பதற்கு சீனா வழங்கிவரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியதென இராணுவத்தளபதி ஜகத் ஜெயசூரிய

(19ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER®
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

SLMO

# திருமுறைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான அனுசரணையுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் எடுக்கும் திருமுறைப் பெருவிழா இன்று காலை 7 மணிக்கு நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் இசைத்துறை வளாகத் தலைவர் சங்கீத கலாநிதி டாக்டர் நா.வி.மு. நவரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். (ந-3)


## சித்தா வைத்தியம்

வாதம், அதி இரத்த அழுக்கம், மதுமேகம், அதிக கொழுமை, மெலிவு, பாலியற் குறைபாடு, மாதவிடாய் கோளாறுகள், தோல் வியாதி, வெண் குஷ்டம், சோறியாசிஸ், சிறுவர் கிரந்தி, சளி, மூட்டு (தொய்வு) போன்ற சகல நோய்களுக்கும் வைத்திய நிபுணர் பாலசுப்பிரமணியம் அவர்களை வரும் 25,26,27 ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் நேரில் சந்தித்து சிகிச்சை பெறலாம்.

0757390195
0771005971
0779773664

முகவரி: டாக்டர் கு.சிவானந்தன்
வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு
சுன்னாகம்.

(2015)


# போரில் காணாமல் போனவர்பற்றி விசாரணைகள் நடத்தப்படுமாம்

## யாழ்.மனித உரிமை ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

போரின் இறுதிக்கட்டத்தில் வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறிய பின்னர் காணாமல்போனவர்கள் குறித்த முதற்கட்ட விசாரணைகளைத் தாம் ஆரம்பிக்க இருப்பதாக யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் ஓமந்தை வாயிலாக இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல்போனவர்கள் குறித்தும் தாம் விசாரணை நடத்தவுள்ளதாக ஆணையம் தெரிவித்துள்ளது.

2009மற்றும் 2010 காலப் பகுதியில் காணாமல் போனவர்கள் குறித்து 1100 க்கு மேற்பட்ட முறைப்படுகள் கிடைத்துள்ளன.

இதேபோன்று காணாமல் போனவர்கள் குறித்து ஆயிரத்திற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் வவுனியா மனித உரிமைகள் ஆணையகத்திலும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரியவருகிறது. எனினும் அதிகளவானோர் காணாமல் போனதாக கருதப்படும் வன்னியில் இதுவரை மனித உரிமைகள் ஆணையகத்திற்கான அலுவலகம் எதுவும் இல்லை.

அவ்விடயம் தொடர்பில் விரைவில் பாதுகாப்பு அமைச்சுடன் பேசி தாம் முடிபுபெடுக்க உள்ளதாகவும் இது தொடர்பில் யாழ்.மனித உரிமை ஆணையகத்தின் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். அத்தோடு கிளிநொச்சியில் ஒரு தற்காலிக அலுவலகத்தை திறப்பது குறித்து தாம் ஆலோசித்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறத்தாழ 1200 தொடக்கம் 2000 பேர் இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயிருந்தனர். அதேபோல 2006இன் பின்னரும் ஏராளமானவர்கள் காணாமல் போயிருந்தனர். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு எந்த முடிபுகளும் இதுவரை எட்டப்படவில்லை.

மனித உரிமை ஆணையகத்தின் இந்த அறிவிப்பு போர் குற்றம் குறித்த சர்வதேச விசாரணை அவசியமில்லை என்பதற்கும், இலங்கை அரசு நியாயமான விசாரணைகளை மேற்கொள்வதான ஒரு கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றுவதற்கான அறிவிப்பேயன்றி அதற்கப்பால் இந்த அறிவிப்பால் எதுவித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படப் போவதில்லை என்று பேர் குறிப்பிட விரும்பாத மனித உரிமை ஆர்வலர் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். (ந-5)




# கண்ணீர் காணிக்கை

அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்
உரிமையாளர்
(எரிக்கனேஸ் பல் மூக்கு கண்ணாடியகம்)

கடந்த 21.07.2010 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்திற்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
0212222486

எரிக்கனேஸ்
ஊழியர்கள்

(2018)



## மணமக்கள் தேவை

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு பணிவான வேண்டுகோள். எம்மிடம் உள்நாட்டில் தொழில் புரியும் உயர் கல்விப் பட்டதாரிகள், பொறியியலாளர்கள், டாக்டர்கள், விரிவுரையாளர்கள், (கத்தோலிக்க சட்டத்தரணிகள் B.BA பட்டதாரிகள் AGA ஆபீஸ், சட்டத்தரணிகள் இந்து, உதவி அரச அதிபர்கள் வங்கியில் உயர் பதவியில் உள்ளவர்கள், லிகிதர்கள் நில அளவையாளர்கள், ரெக்னிசன், ரெக்னிக்கல் ஒவ்வீசர்கள், பட்டதாரி ஆசிரியை,ஆசிரியர்கள், உயர்வைத்தியசாலை எக்ரே பிரிவு, உயர்நிலை உத்தியோகத்தர்களுக்கும் இதே துறையில் வெளிநாட்டில் பணி புரிபவர்களுக்கும் மணமகன், மணமகள் தேவை.

அவுஸ்திரேலியா நாட்டின் சிட்னி யூனிவர்சிற்றியில் பொறியியல் பிரிவு PHD முடித்த 1977 பூரட்டாதி நட்சத்திரம் 5/9 உயரமுடைய மண மகனுக்கு MBBS டாக்டர், ரென்டர் டாக்டர் போன்ற மணமகளை மணமகன் ஏதிர்பார்க்கிறார். மரபு கவனிக்கப்படும்.

அவுஸ்ரேலியாவில் எக்கவுண்டனாகப் பணிபுரிந்து கொண்டு சகோதரனுடன் வாழும் மணப்பெண் திருமணத்திற்காக சொந்த மண்ணுக்கு வந்துள்ளார். 1981, பூரம் நட்சத்திரம், நிறம் பொது, உடன் தொடர்பு கொள்ளவும்.

மொறட்டுவ யூனிவர்சிற்றியில் B.Sc கொம்பியூட்டர் இஞ்சினியரும் லண்டன் CIMA முடித்தவரும் தற்போது வேக் போமிற்றில் வேலைசெய்யும் 6 அடி உயரமுடைய 1980 உத்தராடம் 2 ஆம் பாதத்தில் பிறந்த மணமகன் லண்டன் CIMA முடித்த உயரமான அழகான மணமகளை எதிர் பார்க்கிறார். (மரபு கவனிக்கப்படும்)

இலங்கையில் பொறியியலாளராக தொழில் புரியும் சிவந்த நிறமும் அழகிய் தோற்றமும் உடைய படித்த மரபுவழி குடும்பத்தில் 1977 உத்தராடம் 1 ஆம் பாதம் செவ்வாய் 12 இல் 3 சுற்றுப் பாவம் 67 உடைய மணமகனுக்கு பட்டதாரி அழகான மணமகள் தேவை.

1977 இல் பரணி நட்சத்திரத்தில் 6 அடி 2 அங்குல, 43 பாவமுடைய AGA ஒவ்விஸ் எக்கவுண்டனுக்கு 5 அடி 4 அங்குல மேல் உயரமுடைய படித்த பட்டதாரி மணமகள் தேவை.

எமது சேவையை 30 வருட காலமாக விரும்பியவர்கள் எம்மோடு,புதிய வாடிக்கையாளர்களும் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி ஊடாகவோ கடித மூலமோ நேரிலோ தொடர்பு கொள்ளலாம். அவரவர் மரபுக்கு ஏற்றபடி திருமணம் பேசி நிறைவேற்றி வைப்போம்.

ப.முருகையா
காவலன் விவாகப் பொருத்துனர் நிலையம்,
மானிப்பாய் - கோப்பாய் வீதி,
உரும்பிராய்சந்தி-உரும்பிராய்
தொலைபேசி 0778331242

(2017)


## நடிகர் கருணாஸ் இலங்கை விஜயம்

கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கின்றமைக்காக குடும்பத்துடன் இலங்கை செல்வதாக நகைச்சுவை நடிகர் கருணாஸ் அறிவித்துள்ளார். கதிர்காமக் கந்தனுக்கு நேர்த்திக்கடன் வைத்திருக்கின்றார் என்றும் அதை நிறைவேற்றுவதற்காகவே தற்போதைய உற்சவ காலத்தில் இந்த தல யாத்திரையை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)


# பத்தாம் ஆண்டு நினைவலைகள்

"மறுபிறவி மானுட
உண்மையெனில்
மறுபடியும்
பிறந்திடுங்கள்
எங்கள்
உறவாய்..."



அமரர்
திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்
(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26.06.1941 | மறைவு: 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

-குடும்பத்தினர்-

(C-732)



## கர்நாடக இசை வகுப்புகள்

தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்
நடத்துபவர் -
A.K.கருணாகரன்
தொடர்புகளுக்கு :-
0774239303

(2003)



## MORRIS MINOR CAR FOR SALE

No.8Sri 9772
1000CC (Capacity)
Year of Manufacture
1967
Contact No :
0112933542

(1883)



22.07.2010 முதல்
ஸ்ரீகாந், பிருத்விராக், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்





செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

# கொமர்ஷல் வங்கியில் அருணலு கணக்கு வைத்திருக்கும் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த சிறுவர்கள், ரூபா 30 இலட்சம் வரை வென்றுள்ளார்கள்.









தமது பிள்ளைச் செல்வங்களின் கல்வி முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு "பரீட்சைகளில் சித்தியடையும் சிறுவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில்" பல பெற்றோர்கள் வாக்களிக்கின்றனர். அவ்வாறு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, பெறுமதி மிக்க சிறந்த பரிசுகளை வழங்கி கல்வியில் முன்னேற்றுவதற்கு மிகவும் பலம் வாய்ந்த உள்நாட்டு நிதி நிறுவனம் முன்வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் "குளோபல் பினான்ஸ்" மூலம் தொடர்ச்சியாக 12 வருடங்கள் "இலங்கையின் மிகச்சிறந்த வங்கி" என்ற விருதைப் பெற்ற கொமர்ஷல் வங்கியே அந்த பெரும் வாய்ப்பினை வழங்கும் நிறுவனமாகும்.

திறமையான மாணவர்களையும் தோல்வியடைந்தவர்களாக மாற்றும் லொத்தர் முறைகளில் இருந்து விலக்கி, சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களுக்கும் வெற்றிக்கனியடைந்து மகிழ்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. அருணலு கணக்கு வைப்பாளர்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் திட்டத்தை கொமர்ஷல் வங்கி 1998 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 164 மாணவர்களுக்கு ரூபா 1,350,000 வும், 2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 170 மாணவர்களுக்கு ரூபா 1,400,000 வும், 2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 353 மாணவர்களுக்கு ரூபா 3,014,500 வும், 2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 338 மாணவர்களுக்கு 2,930,471 ரூபாவும், வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு கணக்கு வைப்பாளர்களில் 350 மாணவர்கள் கொமர்ஷல் வங்கியின் அதிகூடிய பரிசுத் தொகையாக 2,963,337 ரூபாவை இவ்வாண்டில் பெற்றுள்ளனர்.

சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அருணலு கணக்கு வைத்திருக்கும் மாணவர்களின் கணக்கில் ஆகக்குறைந்த தொகையாக ரூபா 5,000 கணக்கில் இருப்பின் அவர்கள் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் முறையே, முதலாமிடத்திற்கு 10,000 ரூபாவும், இரண்டாமிடத்திற்கு 7,500 ரூபாவும், மூன்றாமிடத்திற்கு 5,000 ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன், 2007 ஆம் ஆண்டு முதல் வெற்றி பெற்ற எந்தவொரு மாணவரும் தனது மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும் சந்தர்ப்பத்தில் அவரின் அருணலு கணக்கின் மிகுதி தொகையானது இரட்டிப்பாக்கப்படுவதுடன் ஆகக்கூடிய தொகையாக ரூபா. 50,000 மட்டுமே அதிகரிக்கப்படும்.

கல்வியின் முக்கியத்துவத்தை அழுத்தமாக எடுத்துக்கூறும் சமூக பொறுப்புமிக்க நிறுவனமாக உபசரணைப் பங்களிப்பைச் செய்வதையிட்டு கொமர்ஷல் வங்கி பெருமை அடைவதாகவும், கஷ்ட பிரதேசத்தில் பயிலும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களும் பயன் பெறுவதானது, பெருமை தருவதாகவும் வங்கியின் பிரதான பொது முகாமையாளர் திரு. ரவி டயஸ் குறிப்பிடுகிறார்.

கொமர்ஷல் வங்கியின் அருணலு சேமிப்புக் கணக்கானது பிள்ளைகளின் கல்வி ஆற்றலை விருத்தி செய்து, சேமிப்பு நற்பழக்கதை வழக்கப்படுத்துவதை முக்கிய நோக்காக கொண்டு 1998 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அருணலு கணக்கை நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகளிலும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை நிலையங்களிலும் ரூபா 100/- வைப்புச் செய்வதன் மூலம் ஆரம்பிக்க முடியும்.


அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

COMMERCIAL BANK


# அளவெட்டி தெற்கு வெளிவயல்

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

# தீர்த்தத் திருவிழா சிறப்பு மலர் -25.-07.2010



### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



தாயே நீயே சரணம்.
அளவையூர் வெளிவயல் ஸ்ரீ முத்துமாரி அம்மபாள் தீர்த்தோற்சவம் காணும் திரு நாள் உத்தராயனம், தட்சிணாயனம் என்ற முறை யில் பூலோ வாசிகளுக்கு ஒரு வருடம் ஆகும். இது தேவர்களின் ஒரு நாளாகக் கருதப்படுகின்றது.
உத்தராயனம் தேவர்களின் பகல் பொழுதாகவும் தட்சிணாயனம் இரவுப் பொழுதாகவும் உள்ளபடியால் இத் தட்சிணாயனத்தில் அம்பாள் வழிபாடு மிகவும் உன்னதமானது.
ஆடிப் பிறப்பு, ஆடிச் செவ்வாய், ஆடிப் பௌர்ணமி, ஆடி அமாவாசை, ஆடிப்பூரம் என்று எல்லாமே அம்பாளின் சிறப்புத் தினங்களாகும்.
எனவே ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் மஹோற்சவத்தில் தீர்த்தோற்சவம் மானிடனின் ஆணவ மலத்தை அழித்து ஒவ்வொரு மனிதனும் மகிழச்சியாகவும் அமைதியாகவும் சுபீட்சமாகவும் வாழ வழி வகுத்த அம்பாளின் அனுக்கிரகம் மிகவும் முக்கியமானது.
பக்தர்கள் அழைத்தால் ஓடோடி வருபவள் ஸ்ரீ முத்து மாரி அம்பாள். எனவே அம்பாளின் தீர்த்தோற்சவம் சிறப்புற அம்பாளைப் பிரார்த்திப்போமாக!

பிரதம குரு
சிவஸ்ரீ நா.குகனேசக்குருக்கள்.

---

முழுமதியன்ன முகந்நோய் போற்றி
செழுமதியளிக்கும் செல்வியே போற்றி
வழுவற்ற வாழ்வை அளிப்பாய் போற்றி
அளவையூர் நன்னில் உறைபவளே போற்றி போற்றி

### வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்திரு நாட்டில் யாழ்ப்பாணத்திலே கலைச்செல்வமும், தெய்வீகச் செல்வமும், நிலவளமும், நீர்வளமும் ஒருங்கே அமையப் பெற்ற அளவெட்டி என்னும் கிராமத்தின் தென்பால் வயற்கரை ஓரத்திலே கோயில் கொண்டு அருளாட்சி புரியும் முத்துமாரியம்மையின் தீர்த்தத் திருவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

அடியார்களின் துன்ப துயரங்களையும் இன்னல்களையும் களைந்து அருள்மாரி பொழிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் தேர் உற்சவத்திலே அன்னையின் அருட்கடாட்சம் அகிலமெங்கும் பரவி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

*பிரதேச செயலாளர்*
*வலிகாமம் வடக்கு,*
*தெல்லிப்பளை.*

---

### ஆலய தர்மகர்த்தா சபையின் ஆசிச் செய்தி

வெளிவயல் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் மஹோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா 25.07.2010 இன்று சனிக்கிழமை 10 மணிக்குச் சிறப்பாக நடைபெறுகின்றது. முத்துமாரி தேரேறி வீதி உலா வரும் கண்கொள்ளாக் காட்சியை அடியார்கள் பார்த்து மகிழ்ந்து தங்களது குறைபாடுகளையெல்லாம் தீர்த்துத் திருவருளைப் பெற்றுய்கின்றனர். இவ் ஆலயம் வரலாற்று முக்கியத்துவம் உடையது. மாகியம்பதி கண்ணகை அம்மன் மீனாட்சி அம்மன் குடிகொண்டுள்ள திருக் கோவிலினை அண்மித்துத் தென்னளவை வெளிவயலின் அருகாமையில் வீற்றிருப்பது இவ்வூர் மக்களின் பெரும் புண்ணிய பேறாகும். இத் தேவஸ்தானத்தின் திருப்பணிகள் ஆகம முறைப்படி தர்மகர்த்தா சபையால் கவனிக்கப்பட்டு வருகின்றன. 04.05.2010 இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு பெரும் கும்பாபிஷேகம் செய்வ தற்கு அம்பாளின் திருவருள் கிடைக்க வேண்டும் என வணங்குகின்றோம். இக் காலப் பகுதியில் திருக்கோபுரம் அமைத்தல், தீர்த்தக் கேணி கட்டுதல், கல்யாண மண்டபம் நிர்ணயித்தல் போன்ற திருப்பணிகளைச் செய்வதற்கு உள்நாட்டிலிருந்து, வெளிநாடுகளில் வசிப்பவர்களிடமிருந்து நிதியுதவிகள் செய்கின்றார்கள். மேலும் படி அடியார்கள் உதவுவதற்கு முன்வர வேண்டும். எனவே இப் பணிகளைக் கருணையும் ஆனந்தத்தையும் வாரி வழங்கும் முத்துமாரி நிறைவேற்றுவதற்குத் திருவருள் பாலிப்பாள். இத் தீர்த்தத் திருவிழா நன்நாளில் நாம் அம்பாளை வணங்கி எம் குறைபாடுகளை நீக்கி இன்புற்றிருப்போம்.

பொ.தெய்வேந்திரன் (தலைவர்)
த.மகாராஜன் (செயலாளர்)


## தீர்த்தத் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**மாரியம்பாள் பல்பொருள் வாணிபம்**
அளவெட்டி தெற்கு,
கலைநகர்.

**சக்தி பல்பொருள் வாணிபம்**
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**சந்திரன் பல்பொருள் வாணிபம்**
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**தனு மினி வீடியோ சென்ரர்**
பிரதான வீதி,
மாகியப்பிட்டி.

**லோக இரும்பு தொழிலகம்**
பிரதான வீதி, மாகியப்பிட்டி.

**குமார் பல்பொருள் வாணிபம்**
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**சிவதயா துவிச்சக்கரவண்டி உதிரிப்பாக விற்பனையாளர்**
பிரதான வீதி,
அளவெட்டி தெற்கு.

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,
மாகியப்பிட்டி.

**மனோகரன் - மல்டி சொப்**
மாகியப்பிட்டி.

**திறி ஸ்ரார் உணவகம்**
பிரதான வீதி,
மாகியப்பிட்டி.
உரிமையாளர்:-வேலும்மயிலும்.

**செல்வம் சவுண்ட்**
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

**மதி லயிற்**
பிரான் பற்று- பண்டத்தரிபபு.

**சந்சே விறகுகாலை**
பிரதான வீதி,
மாகியப்பிட்டி.

**ஆனந் மோட்டோர்ஸ் மெக்கானிக்**
பிரதான வீதி,
அளவெட்டி மேற்கு.

**சுபேந்திரன் குகயித் ரிங்கர் கராஜ்**
பிரதான வீதி,
அளவெட்டி மேற்கு.

# NORTHANS ENTERPRISES
## நொதன்ஸ் என்ரபிறைசஸ்

Authorized Distributors of Weerodara Exercise Books and all kinds of Stationeries
வீரோதாரா அப்பியாசக் கொப்பிகள் , பாடசாலை உபகரணங்கள் மற்றும் காகி தாதிகளுக்கான உத்தரவு பெற்ற ஏக விநியோகஸ்தர்.
*பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம், யாழ்ப்பாணம்.*

# முதல் மாதத்திற்கு

# வட்டி இல்லாத*

NDB

* 6 மாதங்களுக்கு மேற்பட்ட அடகுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு,
இரண்டாம் மாதத்திலிருந்தே வட்டி அறவிடப்படும்.



தங்கப் பவுணுக்கு
அதிகூடிய பெறுமதி

உங்கள் தங்க
ஆபரணங்களுக்கு
உச்ச பாதுகாப்பு

தாமதமற்ற
விரைவான
சேவை

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

இன்றே அருகிலுள்ள NDB வங்கிக்கு வாருங்கள்.

அழையுங்கள் 011 2 44 88 88

வாழ்க்கையை நிதமும் மாற்றும்

**NDB வங்கி**

உலகத் தரத்திலான இலங்கையர்

# காணாமல் போன இலங்கை மீன்பிடிப்படகு தென்னாபிரிக்காவில் கரையொதுங்கியுள்ளது

(கொழும்பு)

இலங்கை மீன்பிடிப் படகொன்று தென்னாபிரிக்காவில் கரையொதுங்கியுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

பேருவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த மீன்பிடி படகு கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்ததாகவும் படகில் அதன் உரிமையாளரும் மூன்று மீனவர்களும் பயணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சரத் பெரேரா,சுரேஸ்,பாமி மற்றும் ஆர். மனோஜ் ஆகியோரே இந்தப் படகில் பயணித்துள்ளனர் என்றும் தென்னாபிரிக்க கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் குறித்த படகில் பயணம் செய்தவர்களை மீட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த இலங்கை மீனவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவது குறித்து வெளிவிவகார அமைச்சு தென்னாபிரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

# இலங்கையில் 30 வீத மாணவர்கள் இரத்த சோகை நோயால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பாடசாலை மாணவர்களில் சுமார் 30 வீதமானவர்கள் குருதிச் சோகை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவிக்கின்றது.

ஏ.விற்றமின் குறைபாட்டினால் சுமார் 23 வீத மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மாணவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுவதாக விவசாய அமைச்சின் தொழில் முயற்சி அபிவிருத்திப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

உடம்பில் இரும்புச் சத்து குறைவடையும் போது தொடர்ச்சியாக செயற்படமுடியாத நிலை ஏறுபடுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

விற்றமின் ஏ குறைபாடு காரணமாக கண்பார்வை பாதிக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

உணவுபற்றாக்குறை காரணமாக இந்த நிலை ஏற்படவில்லை என விவசாய அமைச்சு தெரிவிக்கின்றது. முறையான உணவுப் பழக்கத்தை பின்பற்றுவதன் மூலம் இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-4)

# யுத்தகாலத்தில் இந்தியா சென்று நாடு திரும்பிய இலங்கையர்களுக்கு பிரஜாவுரிமை

(கொழும்பு)

யுத்த காலத்தில் இந்தியாவில் சரணாகதி அடைந்து நாடு திரும்பிய சகல இலங்கையர்களுக்கும் பிரஜாவுரிமை வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக இந்தியாவில் தஞ்சமடைந்து நாடு திரும்பிய நபர்களுக்கு வவுனியாவில் நேற்று முன்தினம் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலகத்தினால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யுத்த காலத்தில் இந்தியாவில் சரணடைந்து மீண்டும் நாடு திரும்பிய 120 பேருக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மொழி மற்றும் சமூக இணக்கப்பாட்டுக்கான அமைச் சும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டமும் இணைந்து இந்த பிரஜாவுரிமை வழங்கும் திட்டத்தை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் பிரஜாவுரிமையற்ற அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இடம்பெயர்ந்து இந்தியாவில் சரணாகதியடைந்த இந்தியாவில் பிறந்தவர்களுக்கும் பிரஜாவுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிராஜாவுரிமை மிகவும் முக்கியமான ஆவணமாகும் எனவும் இதன் மூலம் ஏனைய ஆவணங்கள் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும் என வவுனியா மாவட்டச் செயலாளர் சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# முன்னாள் விடுதலை புலி உறுப்பினர்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை சாரதி பயிற்சி

(கொழம்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களின் இலங்கை போக்குவரத்து சபை சாரதிகளாக பயிற்சி பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாண போக்குவரத்துச் சபையில் சாரதிகளாக குறித்த முன்னாள் புலி உறுப்பினர்கள் விரைவில் பதவியேற்பார்கள் எனவும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் சாரதிகளாக பணியாற்றியவர்களுக்கே இலங்கைபோக்குவரத்து சப்ப இவ்வாறு சாரதி பயிற்சி வழங்கி வருகின்றதாகவும்; விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ஆயிரம் பேர் போராட்டங்களைத் தவிர்ந்த வேறு பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சாரதிகள்,கணனி இயக்குனர்கள் சமையல் நிபுணர்கள், மேசன்மார்கள் என வேறு தொழில்களில் குறித்த நபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை சாரதிப் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்பட உள்ளது. இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 11 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்ததாகவும் இன்னமும் 8 ஆயிரம் உறுப்பினர்கள் வவுனியா மற்றும் மட்டக்களப்பு பிரதேச புனர்வாழ்வு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயம் ஆடைக்கைத்தொழில் போன்ற பயிற்சிகள் புனர்வாழ்வு மையங்களில் வழங்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. பயிற்சிகளை முடித்துக் கொண்ட முன்னாள் பெண் உறுப்பினர்கள் ஏற்கனவே பிரபல ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் சேவையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-2)

# முகவர் நிலையமூடாக மலேசியா அனுப்பப்பட்ட இளைஞர்கள் உரிய வசதிகள் இன்றி சிரமம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள வெளிநாட்டுவேலை வாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றின் ஊடாக மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட 20 இளைஞர்கள் உறுதியளிக்கப்பட்ட ஊதியமோ வசதிகளோ இன்றி சிரமப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று வருடத்திற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இவர்களின் விமானப் பயணச்சீட்டு, கடவுச்சீட்டு என்பன தொழில் வழங்குநர்களிடம் இருப்பதால் ,இந்த இளைஞர்கள் நாடு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர்.

இதேவேளை மலேசியாவில் தொழிலாளிகளுக்கு 750 ரிங்கிட் அடிப்படை ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற நிலையில் 520 ரிங்கிட் ஊதிய ஒப்பந்தத்தின் படி வேலைக்கு அமர்த்தப்பட்ட இந்த இளைஞர்களுக்கு 481 ரிங்கிட் ஊதியமே வழங்கப்படுகிறது. இந்த ஊதியத்திலேயே அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் இந்தக் குறைந்த ஊதியத்தின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள முடியாதுள்ள நிலையில் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மாதாந்தம் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகையை ஊதியமாகப் பெறலாம் எனக் கூறி வேலை வாய்ப்பு முகவர் நிலையத்தினால் 65 ஆயிரம் முதல் 70 ஆயிரம் ரூபா வரை அறவிடப்பட்டு இந்த இளைஞர்கள் மலேசியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மலேசியாவின் நீலாய் என்ற பிரதேசத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இந்த இளைஞர்கள் 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாங்கி என்ற இடத்திற்கு தொழிலுக்காக அழைத்துச் செல்லபடுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# பல்கலைக்கழக மாணவன் உயிரிழப்புக்கு பொலிஸாரின் தாக்குதல் காரணமல்ல

## பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை உயிரிழந்த றுகுணு பல்கலைக்கழக மாணவன் சுசந்த அருண பண்டாரவின் உடலில் தாக்குதலால் ஏற்பட்ட காயங்கள் எதுவும் இருக்கவில்லை என பொலிஸ்மா அதிபர் மஹிந்த பால சூரிய கூறியுள்ளார். சட்டமருத்துவ அதிகாரியின் அறிக்கையின்படி அம்மாணவனின் உடலுக்குள் இரத்தக்கசிவு ஏற்பட்டமைக்கு இரத்த நாளங்கள் விரிவடைந்தமையே காரணம் எனவும் அவர் நேற்று முன் தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப் பொன்றில் தெரிவித்துள்ளார்.

25 வயதான சுசந்த பண்டார தொடர்ச்சியான வாந்தி மற்றும் காய்ச்சல் காரணமாக கடந்த 8ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் பின்னர் கடந்த வியாழன் இரவு அவர் உயிரிழந்தார். பொலிஸாரினால் தாக்கப்பட்டமையே அவர் உயிரிழந்தமைக்குக் காரணம் என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதற்கு பதிலளிக்கும் முகமாகவே பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸார் மீது பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் சில குற்றம் சுமத்தும் நிலையில் இம் மரணம் குறித்து விசாரிப்பதற்காக குற்றப்புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த இரு குழுக்களை நாம் பதுளைக்கும் மாத்தறைக்கும் அனுப்பினோம்.

இம்மாணவர் சங்கங்கள் தமது அரசியல் நோக்கங்களுக்காக எம் மீது குற்றம் சுமத்துகின்றன. இது முழுப் பல்கலைக்கழக அமைப்பு முறைக்குமே பாதிப்பை ஏற்படுத் தும் எனவும் அவர் கூறினார். (ஓ-4)

# இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்காவே முன்னெடுத்து வருகின்றது

## ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்காவே முன்னெடுத்து வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. தென்மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் றொபர்ட் ஓ பிளெக் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது வெளியிட்ட கருத்துக்களை இதனை தெளிவாக பறைசாற்றி நிற்பதாக ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு மற்றும் 17 ஆவது திருத்தச் சட்ட மூல அமுலாக்கம் தொடர்பில் றொபர்ட் ஓ பிளெக் வலியுறுத்தியிருந்தார்.

இந்தக் கருத்துக்களின் மூலம் இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் அரங்கேற்றி வரும் நாடகத்தை யார் இயக்குகின்றார். என்பது புலனாகியுள்ளதென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளா.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக செயற்பட்ட காலம் முதல் றொபர்ட் ஓ பிளெக் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வந்ததாகவும் தற்போது புதிய பதவியின் மூலம் மேலும் அழுத்தங்களை பிரயோகிப்பதாக சோபித தேரர் சுட்டிக்காட்டியுள்ளதோடு

இலங்கையின் இறையாண்மைக்கு எதிராக அமெரிக்கா செயற்பட்டு வருகின்மை இரகசியமல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாடு கடந்த தமிழீழ இராச்சிய உருவாக்கம் போன்ற செயற்பாடுகளுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருவதாகவும் இலங்கைக்கு எதிரான மனித உரிமை அமைப்புக்களைப் பயன்படுத்தி போலியான பிரசாரங்களை முன்னெடுக்க முனைப்பு காட்டி வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேற்குலக நாடுகளின் ஆசியின்றி தமிழீழ விடுதலைப்புலிகளை அரசாங்கம் இல்லாதொழித்தமையில் ஏற்பட்டுள்ள காழ்ப்புணர்ச்சியே இவ்வாறான பிரசாரங்களுக்கான பிரதான காரணி என சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான சக்திகளுக்கு எதிராக போராடுவதற்கு சகல தேசியவாத சக்திகளும் அணி திரள வேண்டுமென அவர் தமது அறிக்கையில் கோரியுள்ளார். (ஓ-4)

# பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட இவ்வருடம் க.பொ.த உயர்தரத்திற்கு தோற்றவுள்ள தரம் 13 மாணவர்களுக்கான முன்னோடித் தேர்வுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என சபையின் பரீட்சைச் செயலாளர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார். (ஓ-2)

# பாதுகாப்புக் கருதி விக்கிரகங்கள் பொலிஸாரால் நீதிமன்றில் ஒப்படைப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள விநாயகர் ஆலயம் ஒன்றில் பழைமை வாய்ந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான இரு விநாயகர் விக்கிரகங்கள், முருகன்வேல் போன்றவை கடந்த 22 ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸாரினால், பாதுகாப்புக்காக மீட்கப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியான நாகர் கோயில் பகுதியில் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தத்தினால், அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதிகளிலும் முகாம்களிலும் பிற இடங்களிலும் வாழ்ந்து வரும் நிலையில்; அப்பகுதி ஆலயங்கள் பல சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் மக்கள் நடமாட்டம் இன்மையால் கடந்த 22 ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸார் அப்பகுதிக்குச் சென்ற வேளை இவ்வாலயம் பலத்த சேதமடைந்த நிலையில் விக்கிரகங்கள் கைவிடப்பட்ட நிலையிலும் இருந்தமையால் இவ்விக்கிரகங்களின் பாதுகாப்புக்கருதி நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் விக்கிரகங்கள் பொலிஸாரினால் பாராப்படுத் தப்பட்டுள்ளன.

நீதவான் அப்பகுதி மக்கள் மீளக்குடியேறி ஆலய நிர்வாகமோ மக்களோ விக்கிரகங்களை உரிமைகோரும் வரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் ஜோஜ் மகிழ் மகாதேவா உத்தரவிட்டார். (ஓ-2-24)

## பல்கலாசார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையில் நடைபெறும் பல்கலாசார நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு நயினாதீவு மேகலை அரங்கில் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக ஒருமைப்பாட்டமைச்சின் செயலாளர் திருமதி எம். எஸ். விக்கிரமசிங்க கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி எஸ். எம்.பீ.வீரசேகர ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் சம்பள உயர்வுக்கான அடையாள வேலை நிறுத்தம் தொடர்பான அவசர பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட பொது அறையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்துப் பீட அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

◆ ◆ ◆

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரிமண்டபத்தில்கல்லூரி அதிபர் க.இ. இராசசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும் கோப்பாய், நாவலர் தமிழ் வித்தியாலய அதிபருமான திருமதி சாந்தினி வாகீசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவு செய்யப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (4)

## நேர்முகப்பரீட்சை

(கைதடி)

கைதடி ஆயுர்வேத சித்த போதனா வைத்தியசாலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9.30 மணிக்குத் தாதிய உத்தியோகத்தர் மற்றும் ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறுமென ஆயுள் வேத ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஓ-2)

## தொழில் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் தீவக மாணவர்களுக்கான தொழிற் பயிற்சி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 16 முதல் 29 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சபையின் மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் கோரியுள்ளார். (ஓ-4)

## மாணவர்களுக்கான ஊக்குவிப்பு

(குருநகர்)

சென்.யேம்ஸ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவ்வருடம் க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு சென்.யேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தால் கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள் 28 ஆம் திகதி வித்தியாலய அதிபர் த.ஞானப் பிரகாசத்திடம் வழங்கப்படவுள்ளது.

இத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் நலன் கருதி மேற்படி கழகத்தினால் ஆவணி மாதம் முதல் மாலை நேரங்களில் முன்னோடி ஆயத்த வகுப்புகள் நடத்தப்படவுள்ளது. (ஓ-2-39)

## இராசி பலன்

25.07.2010
(ஆடி 9, ஞாயிற்றுக்கிழமை)
சதுர்த்தசி காலை 6.04 மணிவரை
பூராடம் முற்பகல் 7.59 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
பூரணை விரதம், நோன்மதி தினம், சித்தாமிர்தம்.

| | |
|---|---|
| மேடம் | அதிகாரம், தொழில் சிந்தை, உறவினர் வருகை, நல்ல செய்தி. |
| இடபம் | பிரயாண நன்மை, எதிர்பாராத செலவு, பிதாசிந்தை, முயற்சி தாமதம். |
| மிதுனம் | எதிரிகள் தொல்லை, அபகீர்த்தி, எடுத்காரியம் தாமதமாகும், போசன சுகம். |
| கடகம் | நற்பெயர், முயற்சி கைகூடும், நண்பர்கள் வருகை, தேகநலன். |
| சிங்கம் | பகைவர் நேசம், தொழில் சிந்தை, பண வருவாய், பயணம். |
| கன்னி | காரிய இடையூறு, பெரியோர் உதவி, தனவிரயம், உடல் நலக் குறைவு. |
| துலாம் | பயந்த சுபாவம், புதிய தகவல், நல்ல செய்தி, அதிக பிரயாசை. |
| விருச்சிகம் | இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி, முயற்சி கைகூடும். |
| தனுசு | கோபப்படுதல், வேலைச்சுமை, எடுத்காரியம் தாமதமாகும், கௌரவக் குறைவு. |
| மகரம் | சயனசுகம், தெய்வசிந்தை, புதிய முயற்சி, விருந்துபசாரம். |
| கும்பம் | சுபசெலவு, காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, பிரயாணம். |
| மீனம் | தொழில் சிந்தை, பெருமையடைதல், காரிய நன்மை, கலந் துரையாடல். |

வளவன்

## வாரம் ஒரு தகவல்

## ரயில் பயணம்

"எனக்கு இப்படி ரயில் பயணம் செய்வதென்றால் ரொம்பப் பிடிக்கும் சேர்"

"எனக்கும் கூட அப்படித்தான். நீங்க ஹொங்கொங் போயிருக்கிறீர்களா?"

"இல்லையே."

"அங்கேயெல்லாம் சுரங்க ரயில்கள் தான் இருக்கின்றன."

"அப்படியா?"

"ஆமாம். ஒரு ஸ்டேஷனில் நுழைவதற்கு முன் அங்கே இருக்கும் இயந்திரத்தின் ஒரு பக்கத்தில் டிக்கெட்டுக்குரிய பணத்தைப் போட வேண்டும். போட்டால் தான் அங்கிருக்கும் Turn Still என்னும் சுழல் கதவு திறந்து வழி விடும். இயந்திரத்தின் அடுத்த பக்கத்தில் ஒரு பிளாஸ்டிக் டிக்கெட் வந்து விழும். எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அதன் பின் எந்த ஊரில் இறங்க வேண்டுமோ அங்கேயுள்ள இயந்திரத்தில் டிக்கெட்டைப் போட்டால் தான் சுழல் கதவு திறந்து வழிவிடும்.

"அப்படியானால் ரொம்ப கஷ்டமாச்சே?"

"என்ன கஷ்டம்?"

"ஞாபக மறதியால் முதல் ஸ்டேஷினிலே டிக்கெட்டை எடுக்க மறந்து விட்டால்... அல்லது வழியில் எங்கேயாவது அதைத் தவற விட்டுவிட்டால்... இறங்க வேண்டிய ஸ்டேஷனிலிருந்து வெளியில் வரமுடியாது போலிருக்கே"

"ஆமாம். கவனமாகத்தான் இருக்க வேண்டும்."

"நமக்கெல்லாம் அது சரிபட்டு வராது" சேர்.

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"எனக்கு ஞாபக மறதி அதிகம். இப்பொழுது கூட அதற்கு வைத்தியம் பண்ணிக் கொள்வதற்குத்தான் மெட்ராசுக்குப் போய்க் கொண்டிருக்கிருக்கிறேன்."

"நீங்க அவசியம் வைத்தியம் பண்ணிக் கொள்ள வேண்டிய ஆள்தான்."

"ஏன் அப்படிச் சொல்றீங்க"

"இது மெட்ராசுக்குப் போற ரெயின் இல்லை. மெட்ராசிலிருந்து வந்து கொண்டிருக்கும் ரெயின்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80-100 | 120 | 150 |
| தக்காளி | 70 | 70 | 75 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 70 | 70 | 70 |
| கரட் | 100 | 120 | 110 |
| பூசனி | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 50 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 45 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 80 | 90 | 50 |
| லீக்ஸ் | 200 | -- | 100 |
| பீற்றூட் | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 90 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 100 |
| போஞ்சி | 80 | 140 | 75 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

# எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## சுகாதாரக் கல்விப் பிரிவு

(கொழும்பு)

எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுகாதாரக் கல்விப் பிரிவு அறிவித்துள்ளது.

இரண்டாம் காலாண்டுப் பகுதியில் எயிட்ஸ் நோய் தொற்றிய நபர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதோடு, கடந்த வருடங்களுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 53 எனவும், கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த எண்ணிக்கை 68 ஆகக் காணப்பட்டதாகவும் சுகாதாரக் கல்விப் பிரிவு அறிவித்துள்ளது. இந்தப் புள்ளி விபரங்களில் நெகிழ்வுத் தன்மை காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

சில காலங்களில் வீழ்ச்சியும் சில காலங்களில் அதிகரிப்பும் பதிவு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுவதோடு இலங்கையில் மொத்தமாக ஆயிரத்து 249 எச்.ஐ.வீ தொற்றாளர்கள் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-2)

# பசில் குழுவினர் ஜப்பான் விஜயம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான குழு நேற்றைய தினம் ஜப்பானுக்கு விஜயம் மேற் கொண்டுள்ளது. இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் இடம்பெறவுள்ளது. அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜப்பானிய பொருளாதார அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச் சர்களுடன் இலங்கை அமைச்சர்கள் பேச்சு வார்த்தை நடத்த உள்ளனர். அமைச்சர்கள் மூன்று நாட்கள் ஜப்பானில் தங்கியிருந்து பேச்சுவார்த்தை களை நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை- ஜப்பான் போக்குவரத்து துறையினருடன் அமைச்சர் பசில் ராஜபக்ஷ விசேட சந்திப்பொன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# நோய்களைக் குணப்படுத்துவதாக மோசடி செய்த பெண் கைது

(கொழும்பு)

தெய்வீக சக்தி மூலம் நோய்களைக் குணப்படுத்துவதாகக் கூறி பக்தர்களிடமிருந்து சுமார் 50 இலட்சம் ரூபா வரை பணம் வசூலித்து மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்ணொருவரை அரலகன்வில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனது பிள்ளையின் நோயைக் குணப்படுத்துவதற்காக குறித்த பெண்ணிடம் 23 இலட்சம் ரூபாவைக் கொடுத்த குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் இது தொடர்பாக பொலிஸில் புகார் செய்ததையடுத்து அப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

நோயாளிகளைக் குணப்படுத்துவதற்கு மேற்படி பெண் 30 ஆயிரம் ரூபா முதல் 40 ஆயிரம் ரூபாவரை கட்டணம் அறவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# செயலமர்வு

(அல்வாய்)

க.பொ.த உயர்தர வகுப்புக்களிலும் ஆரம்ப வகுப்புக்களிலும் சித்திரப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

2010 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் பங்குபற்றலாம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சித்திர பாடத்தைக் கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஒருவரும் இச்செயலமர்வில் கலந்து கொள்ளலாம். இச்செயலமர்வு கல்வியமைச்சின் அழகியல் பிரிவு பணிப்பாளரினால் நடத்தப்படவிருக்கிறது.

எனவே தவறாது சமூகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (ஓ-2-19)

# குருபூர்ணிமா தினம்

(யாழ்ப்பாணம்)

தாவடி, ஸ்ரீஇராமகிருஷ்ண சமிதியின் குருபூர்ணிமா தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மானிப்பாய் வீதி, தாவடியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகவில் பஜனை நிகழ்வுகளும் தொடர்ந்து 'குருகீதை' வாசிப்பும், ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி உபதலைவர் க.தெய்வேந்திரத்தின் 'சற்குரு சரணம்' என்னும் சிறப்பு ஆன்மீக உரையும் இடம்பெறவுள்ளது. (4)

# கேள்வி கோரல்கள்

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை

## யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள்,மதகுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

## பெருந்தெருக்கள்அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

1. பின்வரும் புனர் நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை மாகாணப் பணிப்பாளர் வ-கி. (வ), பிரதம பொறியியலாளர், கேள்விச் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தக்காரர் தரம் |
|---|---|---|
| 1. கொக்குவில் வட்டுக்கோட்டை வீதி, 1.2-8.0km செப்பனிடலும் தாரூற்றலும் | 50,000.00 | M7 (C8) |
| 2. கட்டுவன், மல்லாகம், சங்கானை வீதி 1.0-5.0km செப்பனிடலும் தாரூற்றலும் | 40,000.00 | M7 (C8) |
| 3. கட்டுவன், மல்லாகம், சங்கானை, வீதி 5.0-6.0km செப்பனிடலும் தாரூற்றலும் | 15,000.00 | M8 (C9) |
| 4. காரைநகர் சுற்றுவட்ட வீதி 3.5-5.0km செப்பனிடலும் தாரூற்றலும் | 15,000.00 | M8 (C9) |
| 5. தொண்டமானாறு வல்லை துன்னாலை வீதி 9/1 இல மதகு மீள் நிர்மாண வேலை. | 20,000.00 | M8 (C9) |
| 6. வல்லை, உடுப்பிட்டி ,வல்வெட்டித்துறை வீதி 2/1 இல மதகு மீள் நிர்மாண வேலை. | 20,000.00 | M8 (C9) |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 04.08.2010 அன்று முற்பகல் 10 மணியுடன் முடிவடையும். முற்பகல் 10.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பின்வரும் காரியாலயங்களில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

I. மாகாணப்பணிப்பாளர் வ-கி.(வ) அலுவலகம், கடற்கரை வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.
II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை , யாழ்ப்பாணம்.

கேள்விப் பத்திர ஆவணங்கள் 26.07.2010 தொடக்கம் -02.08.2010 வரை மீள் அளிக்க முடியாத வைப்புத் தொகையான 750/= + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

2. தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.
   அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் M7 (C8),M8(C9) தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்கள் பின்வரும் அலுவலகங்களில் இலவசமாகப் பார்வையிட முடியும்.
   I. மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை , கடற்கரை வீதி,யாழ்ப்பாணம்.
   II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

04. முன் கேள்வி கோரல் கூட்டம் 02.08.2010 அன்று காலை 10 மணிக்கு பிரதம பொறியியலாளர்,வீதி அபிவிருத்தி அதிகாரசபை ,யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப் பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப் பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் மாகாணப்பணிப்பாளர் வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர் வீதி, அபிவிருத்தி அதிகாரசபை , கடற்கரை வீதி ,யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.
   கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விபரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை கடற்கரை வீதி யாழ்ப்பாணம் | 021 222 2517 |
| அல்லது | |
| பிரதம பொறியியலாளர் , வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம். | 021 222 2968 |

மாகாணப்பணிப்பாளர் வ-கி.(வடக்கு)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கடற்கரைவீதி,
யாழ்ப்பாணம்.

(சி/730)

# தாண்டிக்குளம்-காங்கேசன்துறை ரயில்வே புனரமைப்புப் பணிகள் துரித கதியில் !

(கொழும்பு)

தாண்டிக்குளத்திலிருந்து காங்கேசன் துறை வரை மற்றும் மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரைக்குமான ரயில் பாதைகளைப் புனரமைக்கும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இப்பாதை வேலைகளை அண்மையில் பார்வையிட்ட போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம விடுத்த பணிப்புரையின் பேரிலேயே இப்பாதைகளைப் புனரமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

வடபகுதியில் மீள்கட்டுமானம் மற்றும் மீள் குடியேற்றங்கள் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தியா 425 மில்லியன் அமெரிக்க டொலரை வடபகுதி ரயில் பாதை அமைப்புக்கெனக் கொடுத்துதவியுள்ளது. தாண்டிக் குளத்திலிருந்து ஓமந்தை வரையிலான ரயில்வே பாதைப் புனரமைப்பை அண்மையில் பார்வையிட்ட அமைச்சர் குமார் வெல்கம மன்னார் மற்றும் காங்கேசன்துறை ரயில்வே பாதைகள் புனரமைக்கும் திட்டம் குறித்த திகதியில் முடிவடைந்து விடும். என்று கருத்து வெளியிட்டார். ஓமந்தை ரயில்வே நிலையப் புனரமைப்பு வேலைகள் சமீபகாலமாகத் தடைப்பட்டிருந்த போதிலும் இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ரயில்வே ஊழியர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்த அமைச்சர் வடபகுதி ரயில்வே பாதையில் பணிபுரியும் ஊழியர்களின் தடைப்பட்டுள்ள கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளைப் பணித்தார்.


159 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்ட வடபகுதியின் பாதையில் 85 பாலங்கள் காணப்படுகின்றன. 16ரயில் நிலையங்களும் 12 உப நிலையங்களும் காணப்படுகின்றன. இவை அனைத்துமே மீளத் திருத்திக் கட்ட வேண்டியவை களாக இருக்கின்றன.

வடபகுதி ரயில்வே பாதையைப் புனரமைப்புச் செய்வதற்கு அரச நிறுவனங்களுடன் பல தனியார் நிறுவனங்களும் முன் வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. (ஓ-4)

# வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் விரைவில் கைத்தொழில் பேட்டைகள்

## றிசாட் பதியுதீன்

(கொழும்பு)



வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங் களிலும் விரைவில் கைத்தொழில் பேட்டை கள் நிறுவப்படுமென கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரும் வன்னி மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண அபிவிருத்தி தொடர்பான வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உடனான சந்திப்பு ஒன்று அமைச்சில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படும் எனவும் அதற்கான காணிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் தற்போது அங்கு காணப்படுகின்ற மூல வளங் கள் பற்றி ஆராய்ந்து வருவதாகவும் தெரி வித்ததோடு இவ்வாறு அமைக்கப்படும் கைத்தொழில் பேட்டைகளினால் வடக்கில் காணப்படும் வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதோடு பொருளாதார வளர்ச்சியையும் எட்ட முடியு மெனவும் இவ்வாறான பாரிய அபிவிருத்தித் திட்டங்களினால் பெருமள வான இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக் களைப் பெற்றுக் கொடுக்க முடியுமெனவும் தெரிவித் தார்.

மேலும் அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் விதவைகளின் நல்வாழ்வுக்கான விஷேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிட் டுள்ளதாகவும் இதற்கென நெசவுக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் வட மாகாணத்தின் பொருளாதாரமும் விதவை களின் வாழ்வாதாரமும் முன்னேற்றம் அடை யும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சில்நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜிஏ.சந்திரசிறி உட்பட அமைச்சின்உயர்அதிகாரிகளும் கலந்து கொண் னர் (ஓ-2)


19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
July.2010 to Dec..2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம். மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48


விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010


# 25.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



- 1261 - கொன்ஸ்டன்டீனபோல் நகரை நிக்காயர்கள் கைப்பற்றி பைசண்டைன் பேரரசை அங்கு மீண்டும் அமைத்தனர்.
- 1547 - இரண்டாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக முடிசூடினான்.
- 1593 - பிரான்சின் நான்காம் ஹென்றி புரட்டஸ்தாந்து மதத்தில் இருந்து ரோமன் கத்தோலிக்கத்துக்கு பகிரங்கமாக மதம் மாறினான்.
- 1603 - ஸ்கொட்லாந்தின் ஆறாம் ஜேம்ஸ் பிரித்தானியாவின் முதலாவது மன்னனாக முடி சூடினான்.
- 1799 - எகிப்தில் பிரான்சின் முதலாம் நெப்போலியன் 10,000 ஒட்டோமான்களை சமரில் வென்றான்.
- 1868 - வயோமிங் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1894 - முதலாவது சீன - ஜப்பானியப் போர் ஆரம்பமானது.
- 1898 - புவேர்ட்டோ ரிக்கோ மீதான ஐக்கிய அமெரிக்காவின் படையெடுப்பு ஆரம்பமானது. முதலாவது அமெரிக்கப்படையினர் குவானிக்கா துறைமுகத்தில் தரையிறங்கினர்.
- 1907 - கொரியா ஜப்பானின் ஆட்சியின் கீழ் வந்தது.
- 1908 - அஜினமோட்டோ கண்டுபிடிக்கப்பட்டது.
- 1925 - சோவியத் செய்தி நிறுவனம் டாஸ் நிறுவப்பட்டது.
- 1934 - ஆஸ்திரிய அதிபர் எங்கல்பேர்ட் டொல்ஃபஸ் நாசிகளினால் கொலை செய்யப்பட்டார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினி பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர் : பிரான்சில் இடம்பெற்ற நோர்மண்டி சண்டையில் 5,021 கனேடியர்கள் கொல்லப்பட்டனர்.
- 1973 - சோவியத்தின் மார்ஸ் 5 விண்கலம் ஏவப்பட்டது.
- 1984 - சல்யூட் 7 விண்கலத்தில் சென்ற ரஷ்யாவின் ஸ்வெட்லானா சவீத்ஸ்கயா விண்ணில் நடந்த முதலாவது பெண் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1993 - இஸ்ரேல் லெபனான் மீது பெரும் தாக்குதலை ஆரம்பித்தது.
- 1993 - மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப்பட்டது.
- 1993 - தென்னாபிரிக்காவில் சென் ஜேம்ஸ் தேவாலயத்தில் 11 மதகுருக்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1994 - இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையில் வோஷிங்டனில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டு 1948ம் ஆண்டு முதல் இருந்து வந்த முறுகல் நிலை முடிவுக்கு வந்தது.
- 1997 - கே.ஆர்.நாராயணன் இந்தியாவின் 10 - வது குடியரசுத் தலைவர் ஆனார். தலித் இனத்தைச் சேர்ந்த ஒருவர் இப்பதவியை வகித்தது இதுவே முதல் தடவையாகும்.
- 2000 -பிரான்சின் கொன்கோர்ட் சுப்பர்சோனிக் விமானம் பாரிசில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 109 பேரும் தரையில் 4 பேரும் கொல்லப்பட்டனர்.
- 2007 - பிரதிபா பாட்டீல் இந்தியாவின் முதலாவது பெண் குடியரசுத் தலைவரானார்.

### பிறப்புகள்

- 1875 - ஜிம் கார்பெட், புலி வேட்டைக்காரர் (இ. 1955)

### இறப்புகள்

- 1980- விளாடிமீர் விசோத்ஸ்கி, ரஷ்யப் பாடகர், கவிஞர், நடிகர் (பி 1938)

1983 கறுப்பு ஜுலை: கொழும்பு வெலிக்கடைச்சிறையில் குட்டிமணி, தங்கத் துரை, ஜெகன் உட்பட 37 தமிழ் அரசியல் கைதிகள் சக சிங்கள கைதிகளி னால் படுகொலைசெய்யப்பட்டனர். கறுப்பு ஜுலை படுகொலைகள் உச்சக்கட்டத்தை எட்டியது.



# மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி-2009

2009இல் நடைமுறை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 9.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து 2053 ஐக்கிய அமெரிக்க டொலருக்குச்சமனான ரூ.235,945 தலா வருமானத்துடன் ரூ.4 ஆயிரத்து 825 பில்லியனை அடைந்தது எனவும்,மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வட மாகாணத்தின் பங்களிப்பு 2009இல் 3.3 சதவீதமாகக் காணப்பட்டது.இது 2008 இன் 3.2சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவான மேம்பாடு எனவும் மத்திய வங்கி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேல் மாகாணம் 2009இல் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதியுயர் பங்களிப்பை ஏற்படுத்தியது.எனினும் மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கு 2008 இன் 45.4 சதவீதத்திலிருந்து 45.1 சதவீதத்திற்கு மேலும் குறைவடைந்தது. (திருத்தியடைக்கப்பட்ட மதிப்பீடுகள்) 2008 உடன் ஒப்பிடுகையில்,வட மேல் மாகாணம் தென் மாகாணத்துடன் அதன் தொடர்பான நிலையை உள்ளக ரீதியில் மாற்றிக் கொண்டதுடன் 2009இல் மொ.உ.உற்பத்திக்கான இரண்டாவது மிகப் பெரிய பங்களிப்பாளராக விளங்கியது.

2008இல் தென் மாகாணம் 10.5 சதவீதம் கொண்ட இரண்டாவது மிகப் பெரிய பங்களிப்பை பதிவு செய்தது.எனினும் இது 2009இல் 10.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் தென் மாகாணத்தை மூன்றாவது உயர்நிலைக்குத் தள்ளியது.

மொ.உ.உற்பத்திக்கு மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களின் பங்குகள் 2008இன் 9.8 சதவீதம் மற்றும் 6.4 சதவீத்திலிருந்து 2009இல் முறையே 9.6 சதவீதம் மற்றும் 6.3 சதவீத்திற்கு வீழ்ச்சியடைந்தன.


வடமேல் மாகாணம் அதன் பங்களிப்பை 2008இன் 9.9 சதவீத்திலிருந்து 2009இல் 10.3சதவீதத்திற்கு அதிகரித்தது.

மொ.உ.உற்பத்திக்கு வட மாகாணத்தின் பங்களிப்பு 2008 இன் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் 3.3 இற்கு சிறிதளவில் மேம்பட்டது.இது 30 வருட போர் முடிபுக்கு வந்ததன் பின்பு அவதானிக்கப்பட்ட சாதகமான அபிவிருத்தியாகும்.உள்நாட்டு போர் முடிபடைந்த பின் நுகர்வோர் மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையிலான மேம்பாட்டின் தாக்கம் காலம் கடந்தபின் மட்டுமே பொருளாதாரத்தால் உணரப்படுமாகையால்,மொ.உ. உற்பத்திக்கு வட மாகாணத்தின் பங்களிப்பின் விரிவாக்கத்தில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் ஏற்படவில்லை:

இதேவேளை கிழக்கு,வட மத்திய,ஊவா மாகாணங்கள் மொத்த மொ.உ.உற்பத்திக்கு 6 சதவீத மட்டத்திற்கும் குறைவாகவே பங்களிப்புச் செய்த போதிலும் இம் மூன்று மாகாணங்களும் 2008 இன் 5.6 சதவீதம்,4.7 சதவீதம் மற்றும் 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்திக்கு 2009இல் முறையே 5.8 சதவீதம் ,4.8 சதவீதம் மற்றும் 4.6 சதவீதப் பங்களிப்பைச் செய்தன.

துறைமுகம்,விமான நிலையங்கள்,வங்கித் தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் தொடர்பான பொருளாதார செயற்பாடுகள் தற்போதும் மேல் மாகாணத்தில் செறிந்திருப்பதால் இம் மாகாணம் நாட்டின் மொ.உ. உற்பத்திக்கு கணிசமான அளவில் பங்களிப்பைச் செய்தது.

மேல் மாகாணம் இதுவரை மொ.உ.உற்பத்தியின் ஆகக் கூடிய பங்கிற்கு வகை கூறிய போதிலும் 2009இல் செயலாற்றம் மாகாணங்களுக்கிடையேயான ஏற்றத் தாழ்வில் குறைப்பு ஒன்றை எடுத்துக் காட்டுகின்றது.







**மாகாணங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (நடைமுறைச் சந்தை விலைகளில்) முக்கிய பண்புகள் 2008[1] மற்றும் 2009[2]**

| விடயம் / மாகாணம் | ஆண்டு | மேல் | மத்திய | தென் | வட | கிழக்கு | வடமேல் | வட மத்திய | ஊவா | சப்பிரகமுவ | தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொ.உ.உ.(ரூ.பில்.) | 2008 | 2,003 | 431 | 465 | 139 | 246 | 439 | 207 | 200 | 281 | 4,411 |
| | 2009 | 2,178 | 465 | 492 | 159 | 281 | 495 | 232 | 220 | 303 | 4,825 |
| மொ.உ.உ. வளர்ச்சி (%) | 2008 | 20.4 | 25.2 | 23.1 | 33.4 | 32.9 | 24.0 | 45.0 | 13.1 | 22.0 | 23.2 |
| | 2009 | 8.7 | 8.1 | 5.9 | 14.1 | 14.0 | 12.8 | 12.1 | 10.0 | 7.8 | 9.4 |
| மொ.உ.உ. பங்கு (%) | 2008 | 45.4 | 9.8 | 10.5 | 3.2 | 5.6 | 9.9 | 4.7 | 4.5 | 6.4 | 100.0 |
| | 2009 | 45.1 | 9.6 | 10.2 | 3.3 | 5.8 | 10.3 | 4.8 | 4.6 | 6.3 | 100.0 |
| தலைக்குரிய வருமானம் (ரூ. '000) | 2008 | 348 | 164 | 190 | 119 | 163 | 191 | 171 | 155 | 148 | 218 |
| | 2009 | 375 | 175 | 199 | 134 | 183 | 213 | 189 | 168 | 157 | 236 |
| தலைக்குரிய வருமான விகிதம்[3] (%) | 2008 | 1.6 | 0.8 | 0.9 | 0.5 | 0.7 | 0.9 | 0.8 | 0.7 | 0.7 | 1.0 |
| | 2009 | 1.6 | 0.7 | 0.8 | 0.6 | 0.8 | 0.9 | 0.8 | 0.7 | 0.7 | 1.0 |

*1-திருத்தியமைக்கப்பட்டது,2-தற்காலிகமானது,3-முழுத் தீவின் தலைக்குரிய வருமானத்திற்கும் மாகாணத்தின் தலைக்குரிய வருமானத்திற்கும் இடையேயான விகிதம்)*

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 112.00 | 113.63 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 170.63 | 174.25 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 143.67 | 147.21 |
| சுவிஸ் பிராங் | 106.41 | 109.83 |
| கனேடிய டொலர் | 106.80 | 110.36 |
| அவுஸ்திரேலிய டொலர் | 99.02 | 102.06 |
| சிங்கப்பூர் டொலர் | 81.19 | 83.19 |
| ஜப்பான் யென் | 1.28 | 1.31 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.41 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.70 | |




## பி.சி.ஹவுஸ் நிறுவனத்தின்
## ஆரம்ப பங்கு வழங்கல் ஓகஸ்ட் 5
### நிறுவன வளர்ச்சியை ஊக்கப்படுத்தும்-பி.சி.ஹவுஸ்

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் முன்னணியில் திகழும் பி.சி.ஹவுஸ் லிமிட்டட் நிறுவனம் ஆரம்ப பொது வழங்கலை மேற்கொள்வதற்கான அனுமதியை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிடம் இருந்து பெற்றுள்ளது.

இதனையடுத்து,மொத்தப் பங்குகளில் 25 வீதமான பங்குகளை பொது வழங்கல் ஊடாக பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு நிறுவனம் தீர்மானித்துள்ளதாவும்,ஒவ்வொன்றும் 11 ரூபாய் முகப் பெறுமதி கொண்ட 57,233,334 (57.2 மில்.) பங்குகளை வழங்குவதன் மூலம் 629,566,674 (630 மில்.) ரூபாயைத் திரட்டுவதற்கும் திட்டமிட்டுள்ளதாக பி.சி. ஹவுஸ் நிறுவனத் தலைவர் எஸ்.எச்.எம்.றிசான் தெரிவித்தார்.

ஓகஸட் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆரம்ப பொது வழங்கலில் பி.சி. ஹவுஸ் நிறுவனத்தின் பங்குகளைக் கொள்வனவுசெய்வதன் ஊடாக,நாட்டில் மிக வேகமாக வளர்ச்சி அடைந்துவருகின்ற தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.




1997இல் ஆரம்பிக்கப்பட்ட பி.சி.ஹவுஸ் நிறுவனம், 2000 ஆம் ஆண்டு பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டது.சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அரச துறை மற்றும் தனி நபர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையை இந் நிறுவனம் வழங்கி வருகிறது.கணனிகள் ,அது சம்பந்தமான உபகரணங்கள்,தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் என்பவற்றை புத்தாக்க முறையில் வழங்கி வருவதுடன் நாடளாவிய கிளை வலையமைப்பினூடாக சிறந்த விற்பனைக்கு பிந்திய சேவையையும் அளித்து வருகிறது.

பி.சி.ஹவுஸ் நிறுவனமானது யாழ்ப்பாணம் உள்ளிட்ட வெளியிடங்களில் 13 பிராந்திய கிளைகளையும் கொழும்பில் 14 நவீன விற்பனை கூடங்களையும் கொண்டுள்ளது.

இதற்கமைய பங்குகளின் ஆரம்ப பொது வழங்கல் மூலம் கிடைக்கும் நிதியில் 200 மில்லியன் ரூபாயினை இணைய அடிப்படையிலான தரவுமையம் (IDC) தொழில் முயற்சிக்காகவும்,100 மில்லியன் ரூபாயினை பி.பி.ஓ. முயற்சிக்காகவும் பயன்படுத்தவுள்ளது.

PCHஇன் பொது வழங்கல் தொடர்பான மேலதிக தகவல்களை அந் நிறுவனத்தின் கிளைகளிலும், NDB வங்கிக்கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.அல்லது www.pch.lk,www.ndbib.com,www.cse.lk ஆகிய இணையத் தளங்களில் ஒன்றிலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4895.51 | 46.34 |
| மிலங்கா விலைச்சுட்டி | 5545.13 | 44.86 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 2050.31 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : சி.எப்.ரி.,பியூப்பிள்ஸ் பினான்ஸ்,புளூ டைமன்ட்ஸ்(எக்ஸ்) ,பறகன்,புளூ டைமன்ஸ்,போட் லான்ட்.
***சரிவைக் காட்டிய பங்குகள்*** : சிங்கலங்கா ,மூல்லர்ஸ் ,ஆர்பிகோ, கோகோ லங்கா ,கார்கோ போட் ,ஈ.பி.கிறேசி.

## கொமர்ஷல் வங்கியை பினான்ஸ் ஏசியா சிறந்த வங்கியாக தரப்படுத்தியது

இலங்கையில் மிகச் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியை பினான்ஸ் ஏசியா சஞ்சிகை தரப்படுத்தியுள்ளது.ஆசியாவில் மதிப்பு வாய்ந்த நிதிச் சஞ்சிகைகளில் ஒன்றான பினான்ஸ் ஏசியாவாலேயே இவ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை கொமர்ஷல் வங்கியை இலங்கையின் மிகச் சிறந்த வங்கியாகவும் சிற்றி வங்கியை நாட்டில் செயற்படும் மிகச் சிறந்த வெளிநாட்டு வர்த்தக வங்கியாகவும் மேற்படி சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சஞ்சிகையின் பிரசித்தி வாய்ந்த விருதுகள் திட்டத்தில் இலங்கை சேர்க்கப்பட்ட இரண்டாவது தடவையாகும். கொமர்ஷல் வங்கி முதல் சந்தர்ப்பத்திலும் இக் கௌரவத்தைப் பெற்றதுடன்,பினான்ஸ் ஏசியா இதுவரை இலங்கைக்குவழங்கிய 2 மிகச்சிறந்த விருதுகளில் இரண்டினையும் சுவீகரித் துள்ளது.

கடந்த மார்ச்சில் கொமர்ஷல் வங்கி இலங்கையில் மிகச் சிறந்த வங்கியென குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் தொடர்ந்து 12 ஆவது ஆண்டாக தர நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

இவ் விருதுத் தெரிவுக்கு,2009 ஆம் வருடத்துக்கான நிதிச் செயற்பாட்டின் மதிப்பீடு மற்றும் போதிய மூலதனத் தன்மை,பணப்புரள்வு மற்றும் செலவு வருமான விகிதாசாரங்கள் ,வரிக்கு முந்திய,பிந்திய இலாபங்கள்,சாத்தியமான இழப்புகளுக்கான ஒதுக்கீடு ,உரிமையாண்மை விகிதம்,பலமான கிளை வலையமைப்பு,முகவர்கள் மற்றும் பிரதிநிதிகள் வலையமைப்பு போன்றன கருத்தில் கொள்ளப்பட்டன.

## திடீர் பொருளாதார மாற்றங்களைச் சந்திக்க ஆசியா தயாராக வேண்டும்
### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

திடீர் பொருளாதார மாற்றங்களைச் சந்திக்க ஆசியா தயாராக இருக்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியம்(ஐ.எம்.எப்.) தெரிவித்துள்ளது.

திடீர் பொருளாதார மாற்றம் சாதகமாகவோ பாதகமாகவோ இருக்கலாம் என சர்வதேச நாணய நிதியத்தின் மேலாண்மை இயக்குநர் டொமினிக் ஸ்ட்ரஸ் கான் தெரிவித்தார்.தென் கொரியாவில் நடைபெறும் ஆசிய சர்வதேச மாநாடில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இப்போது பெரும்பாலான ஆசிய நாடுகள் பொருளாதார ரீதியாக வேகமாக வளர்ந்து வருகின்றன.வேகமாக வளர்ந்து வரும் நாடுகளுக்கு வெளிநாடுகளில் இருந்து முதலீட்டை ஈர்ப்பதே பிரச்சினையாக இருக்கிறது. சர்வதேச பொருளாதாரத்தில் இப்போது ஆசியக் கண்டத்தின் ஆதிக்கமே உள்ளது.இது மேலும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்



### சாட்சியம்

விடுதலை வேண்டிய
எங்கள் பயணம்
விடிவினை நோக்கி
விரையும் பொழுதில்
அயலார் வஞ்சனையும்
ஆதிக்க வெறியும்
இழைத்த அநீதியின்
இன சங்காரத்தின்
அன்னை மண்ணின்
அவல வாழ்வின்
அழியாத சாட்சியங்கள்

இணுவை சுகந்தி

### அறிவு பெறுவோம்

நேற்றைய செய்கைகள், இன்று பிழையாகலாம்;
இன்றைய செய்கைகள்; நாளை பிழையாகலாம் !
கொள்கைகள் கொள்ளை போகலாம்!
உணர்வுகளுமா?...?
நாமிங்கு நிலையாக வாழ
அன்னப்பட்சிகளின் அறிவு பெறுவோம்

அசியோபி

### சத்தமில்லா தீர்வு

சந்தேகத்தின் பேரில்
காணாமல் போன – நம்
உறவுகள்... போல்
யுத்தம் முடிந்தும்
சத்தமில்லாது போனது – நம்
இனப்பிரச்சினைத் தீர்வு...?

பூலக்சி
கல்லுவம்



### சொல்லாயோ?

அம்மா...
உனக்காக கோயில்
கட்டியிருந்தேன்
உனக்காய் என்னை விட்டு நீ
சென்றது எதற்காய்
சொல்லாயோ?
உயிரை எழுதியிருந்தேன்
உனக்காய்
உதிரத்தை இன்று கண்ணீராக்கி
சென்றது எதற்காய்
சொல்லாயோ?
பார்வை பூத்திருந்தேன் உனக்காய்
பாதியில் என்னைவிட்டு இன்று
சென்றது எதற்காய்
சொல்லாயோ?

சி.ஷாதனா
பத்தமேனி அச்சுவேலி

### இமயம் தொட...


உதிரத்தைப் பாலாக்கும்
பசுவைப்பார்
உறவுக்காய் வாழும்
காக்கை பார்
ஊரோடு ஒத்தோடும்
எறும்பைப்பார்
நன்றிக்காய் வாலாட்டும்
நாயைப்பார்
உன் நாளைய வாழ்வுக்காய்
நல்வழி நடந்துபார்...

மாவை. நா.கஜேந்திரா

### உதயமாகின்றது

பாதைகள் மாறலாம்
பயணங்களும் மாறலாம்
ஆனால்
மனதின் வைராக்கியம்
என்றும் மாறாத சுவடுகளாய்
உன்னோடு இருக்கட்டும்
இனி எந்நாளும்
உனக்காகவே உதயமாகும்

த.டினிசா
கொடிகாமம்



## மௌனத்தின் தேடல் – 29

### என் மூச்சு எங்கே?

கருவறையில் உயிர்த்தெழுந்து
விபத்து எனும் மரண அறையில்
இந்த விலை பெறுமதியற்ற உயிர்
எனும் தங்கத்தை ஒருநொடியில்
விற்றுவிட்டு மௌனமாய் தூங்குகிறாயே
எதற்காக?

ர.வித்தியா
வடஇந்து மகளிர் கல்லூரி

### எட்டிக்கத் தெரியாத...

எட்டிக்கத் தெரியாத நம்
இளசுகள் வீதியெங்கும்
விரைந்து வெட்டியோடி
குதூகலித்து கும்மாளமடித்து
முட்டிமோதி முடிவில்
மரணம் தான்

சந்நிதி – ரஞ்சினி

### மறுப்பதேனோ?

ஓ... மோட்டார் வண்டியே
ஏன் இந்த நிலை உனக்கு?
எத்தனையோ அதிகாரிகள் உன்
முன்னின்றும் ஏன் உன்னை
தூக்க மறுக்கிறார்கள்!
உன்னிடத்தே குண்டுகள் இருக்கும்
என்ற ஐயத்தாலா?

இளவரசி பொன்ராசா
வேதவனம் ஒழுங்கை, பருத்தித்துறை

### இனியும் வேண்டாமே

இன்னும் ஓயவில்லை
நம் இழப்புக்கள்
செல்போன் பாவனை கூடியதால்
வாகன விபத்துக்களும் அதிகமானது
மனிதனே! நீ
நிதானமாக இருந்தால்
வீதி விபத்துக்களையாவது
குறைக்கலாமே
இதுவரை வீணாக அழிந்தது போதும்
இனியும் வேண்டாமே அழிவுகள்

கே.துவுஷி
அளவெட்டிதெற்கு

### வேகத்தின் வெகுமதிகள்

வீதிக் குறியீடுகளை
புறம்தள்ளிவிட்டு
வாகனங்களை செலுத்தும்
ஓட்டுனர்களுக்கு
கிடைத்த வெகுமதிகள்
இவைதானோ?

வி.அபிஷன்
துன்னாலை கரவெட்டி

### நிலை

நடுவீதியில் தவழும் மோட்டார் வண்டியே
உனக்கோ இந்தநிலை
உன்மேல் சவாரிசெய்த மானிடனுக்கு
எந்த நிலை நீயே சொல்

யோகராஜா யாழுவன்
யா/நெல்லியடி ம.ம.வி

சங்குநாதம்

### மரணம்

மானிடனாய் பிறந்த மனிதனுக்கு
மரணம் ஒருவழி
தமிழனாய் பிறந்த மனிதனுக்கு
மரணம் பலவழி

ரி.வசி
சிறுப்பிட்டி

### உணர்வார்களோ!

வீதி விபத்தின்
வீண் ஆபத்திலிருந்து
விபத்தை தவிர்த்திட
வீதி விதிமுறையும்
வீதி ஒழுங்குமுறையும்
வேணுமே நடைமுறையில்

தங்கத் தமிழன்
காரைநகர்

### விபத்து

வீதியில் விபத்து
பாதியில் பயணம்
சாலையில் சைக்கிள்
காலையில் செய்தி
மதுவினால் மதியிழந்தது
கதியினால் விதிமுடிந்தது.

பற்றூரான்
பருத்தித்துறை

### இனி வாழ்வே இருள்

11 ஆண்டுகள் எம்முடன் வாழ்ந்து
ஆசையுடன் எம்மை அரவணைத்து
கல்விப்படி பல கடந்து
உன்மீது எமக்கு இரக்கம் காட்டி
புதிய படைப்பு பல படைப்பாய்
என எண்ணி
கனவுக் கோட்டை கட்டி வாழ்ந்தோம்
இனி வாழ்வோமா – தோழி
சாரணர் சின்னம் சூட்ட ஆசைப்பட்டாய்
மரணச் சின்னம் சூட்டி விட்டதே–நீ
இவ் வையகத்தில் இல்லாததனால்
எம் வாழ்வே இனி இருள்தான்

லேனுஜா கோபாலன்
வட்டுக்கோட்டை

## மௌனத்தின் தேடல்- 30



அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.07.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# ஐ.நா.வின் விசாரணையில் போர்க் குற்றங்கள்

யூகோஸ்லாவியாவிற்குச் சொந்தமான கொசோவோவில் வாகனத் தரிப்பிடமொன்றில் 1999ஆம் ஆண்டுக்குரிய மனித புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக கடந்த மே மாதம் 10ஆம் திகதி லண்டனில் வெளியாகும் கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த புதைகுழியில் 250 அல்பேனி



யர்களின் சடலங்கள் இருப்பதாகவும் அவற்றை விரைவாக மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 1988 மற்றும் 90ஆம் ஆண்டுகளில் சேர்பிய படையினரால் கொசோவோவில் வாழ்ந்த 10 ஆயிரம் அல்பேனியர்கள் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. 10 வருடங்களுக்குப் பின்னரே தற்போது இந்த மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுவரும் யுத்த குற்றங்கள் தொடர்பான வழக்கொன்றுக்கு இந்த மனித புதைகுழி முக்கியமானதாக அமைந்துள்ளது. அப்போதைய சேர்பியத் தலைவரான ரதோவன் கரடிஸிற்கு எதிராக இந்த போர்க் குற்ற விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

தலைமையில் நடைபெற்றது.

போர்க் குற்றங்கள் அல்லது மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் செயற்படுவது புதிய விடயமல்ல. அதே போல், அது தொடர்பாக ஏற்படும் நெருக்கடிகளும் புதியவையல்ல.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் காஸா பள்ளத்தாக்கை ஆக்கிரமித்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களும் மனித உரிமை மீறல்களும் பாரதூரமான வகையில் இடம்பெற்றதாக அந்த வருடம் செப்டம்பர் மாதம் ஐ.நா.வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் போர்க் குற்றங்களிலும் மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச் செயல்களிலும் ஈடுபட்டதற்கான சாட்சியங்கள் இருப்பதாக அந்த சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் நீதிபதி ரிச்சர்ட் கோல்ட் ஸ்டோன் தெரிவித்திருந்தார்.

நேரடியாக பாலஸ்தீன மக்களை இலக்குவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் போர்க் குற்றமெனக் கருத வேண்டும் என அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தேவைக்கு அதிகமான போர்ப் பலத்தைப் பயன்படுத்தியதன் மூலம் இஸ்ரேல் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றத்தை இழைத்திருப்பதாகவும் கோல்ட்ஸ்டோன் தெரிவித்திருந்தார்.

575 பக்கங்களைக் கொண்ட விசாரணை அறிக்கையில், காஸா பள்ளத்தாக்கில் உள்ள ஆயுதக் குழுக்கள் பொது மக்களை இலக்குவைத்து இஸ்ரேல் மீது நடத்திய எரிகணைத் தாக்குதல்களும் போர்க் குற்றங்களில் உள்ளடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சமய வழிபாடு நடைபெறும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை நீதிபதி கோல்ட்ஸ்டோன் உதாரணமாக காட்டியிருந்தார். வழிபாட்டுத் தளங்களை ஆயுதக் குழுக்கள் தமக்கு பாதுகாப்பிற்கான இடமாகப் பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்கக் கூடும் என்ற போதிலும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் மத வழிபாடு நடைபெறும் இடமொன்றின் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதை நியாயப்படுத்த முடியாது எனவும் அவர் கூறியி ருந்தார்.

இஸ்ரேல் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் மிகவும் பார



தூரமானவை. கடந்த மே மாதம் 31ம் திகதி காஸா பள்ளத்தாக்கிற்கு மனிதாபிமான உதவிகளை எடுத்துச் சென்ற கப்பல்களில் ஒன்றைத் தாக்கி 11 பேர் கொலை செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக நியமிக்கப்பட்ட சர்வதேச விசாரணைக் குழுவின் தலைமைப் பதவியை ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான பாலித கொஹன பொறுப்பேற்றுக் கொண்டார். எனினும், அந்த விசாரணை அறிக்கைகள் இன்னும் வெளியிடப்படவில்லை. போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச தலையீடுகள் இரண்

## ஐ.நா. சபையின் விசாரணை முடிவில் மரணதண்டனையும் தீர்ப்பாகலாம்

சேர்பியத் தலைவர்களுக்கு எதிராக நடத்தப்படும் இந்த விசாரணைக்கெதிராக சேர்பிய இனத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்பு அலுவலகத்திற்கெதிரில் நடைபெற்ற இவ்வாறான ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்தி உலகம் முழுவதும் சூடான செய்தியாக மாறியிருந்தது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சின்னத்தின் பின்னணியில் பான் கீ மூனின் எரியூட்டப்பட்ட உருவ பொம்மையின் தலை இரும்பு வேலிகளுக்கிடையில் வீழ்ந்து கிடப்பதைப் போன்று எடுக்கப்பட்டிருந்த புகைப்படமானது அந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தையும், தன்மையையும் தெளிவாகக் காட்டியிருந்தது.

விடுதலைப் புலிகளுடனான போரின் போது ஏற்பட்டதாகக் கூறப்படும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களை ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர் குழு சம்பந்தமாகவே பதற்றமான தன்மை கொண்ட ஆர்ப்பாட்டம் அமைச்சர் விமல் வீரவன்ச

இரண்டு தரப்பும் விசேடமாக இஸ்ரேலிய இராணுவத்தினர் மனிதாபிமானத்திற்கெதிரான போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டும் என்பது தெரியவந்துள்ளதால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை உரிய ஆய்வுகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அதுமாத்திரமல்லாது இஸ்ரேல் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துகிறதா என்பதைக் கண்காணிக்க நிபுணர் குழுவொன்றை நியமிக்க வேண்டும் எனவும் தொடர்ந்து மனிதாபிமானத்திற்கு எதிரான யுத்த செயற்பாடுகள் இடம்பெறுமானால் காஸா பள்ளத்தாக்கின் நிலைமை தொடர்பாக சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்தில் அறிக்கையிடுமாறும் ஐ.நா குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்தும் போர்க் குற்றங்களில் உள்ளடங்கும் வகையில் செயற்படுமானால் பலஸ்தீன அதிகார சபை தொடர் பாக வும் அதேநடைமுறையைக் கடைப்பிடிக்குமாறும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

டாம் உலக யுத்தம் வரை நீண்டு செல்கிறது.

ஜேர்மனிய நாசித் தலைவர்களுக்கெதிராக நடத்தப்பட்ட நியூரம்பேர்க் போர்க் குற்ற விசாரணை இதில் முக்கியமானதாகும். இதனைத் தவிர அண்மைக் காலத்தில் இடம்பெற்ற யூகோஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சுலோபோடன் மிலோசோவிக்கிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் ஐந்து வருடங்களாக சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

வழக்கு விசாரணைகள் முடிவடைய முன்னர் மிலோசோவிக் சிறையிலேயே உயிரிழந்தார். இதனையடுத்து வழக்கு விசாரணைகள் நிறுத்தப்பட்டதுடன் தீர்ப்பும் வழங்கப்படவில்லை.

தற்போதைய சர்வதேச போர்க் குற்றம் தொடர்பான விதிகளில் காணப்படும் முக்கியத்துவம் என்னவெனில் நாடொன்று அல்லது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் போர்க் குற்றங்கள் சம்பந்தமாக தனிநபர் ஒருவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளதாகும்.

போர்க் குற்றம் என்ற எண்ணக்கரு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர்



ஏற்பட்டது. இதற்கு முன்னர் யுத்தம் நடைபெறும் போது மனித அவலங்கள் ஏற்படுவது இயற்கையானது எனக் கருதப்பட்டது.

ஜேர்மனி நாசித் தலைவர்கள் இரண்டாம் உலக யுத்த காலத்தில் 10 இலட்சம் யூதர்களைப் படுகொலை செய்தனர். ஜப்பானிய இராணுவத்தினர் சிறைக்கைதிகளையும் சாதாரண மக்களையும் கொடூர சித்திரவதைக்கு உட்படுத்தினர். இதனால், நேச நாடுகள் இவ்வாறான குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் எனத் தீர்மானித்தன.

1945 முதல் 1946 வரை நடைபெற்ற நியூ ரம்பேர்க் வழக்கு விசாரணை களில் 12 நாசித் தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற இதேபோன்ற விசாரணையில் ஏழு ஜப்பானிய அனுபவங்களைக் கொண்டே நெதர்லாந்தின் ஹேக் நகரில் தற்போதைய சர்வதேச நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது.

இனப் படுகொலை, மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம், யுத்தத்தின் இடையில் பொதுமக்களையோ, போராளிகளையோ கொடூரமாக கையாளுதல் போன்றன போர்க் குற்றங்களில் உள்ள



டங்குகின்றன. எனினும் இவற்றில் பிரதானமானது இனப்படுகொலையாகும். சர்வதேச போர்க் குற்றச் சட்டம் போர்க்குற்றங்களை இவ்வாறு வகைப்படுத்துகிறது.

யுத்த தேவைக்கு உட்படாத நகரங்கள், கிராமங்கள் போன்றவற்றை அழித்தல், பாதுகாப்பற்ற நகரங்கள், கிராமங்கள், வீடுகள் மற்றும் கட்டடங்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தி அவற்றை அழித்தல்.

**சுனந்த தேசப்பிரிய**

மத, கலாசார, கல்வி நிலையங்கள் போன்றவற்றைக் கைப்பற்றுதல், அவற்றுக்கு சேதம் ஏற்படுத்துதல்.

பொது சொத்துக்களை அழித்தல்.

போன்றன யுத்த குற்றங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம் என்பது ஆயுதப் போராட்டத்தின் போது மக்களுக்கு எதிராக நடத்தப்படும் குற்றங்களாகும்.

கொலை செய்தல், அடிமைப்படுத்துதல், நாடு கடத்துதல், சிறைவைத்தல்,

(13ஆம் பக்கம் பார்க்க)

# வள்ளுவர் கண்ட ஒப்புரவு 2

## ஒரு புதிய தத்துவம்

செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

பேராசிரியர்
கா.மீனாட்சிசுந்தரனார்

உலக இயற்கையுடன் போராட்டம் நடத்த வேண்டும் என்ற உறுதிப்பாட்டை அறிவு மனத்திற்கு ஊட்டுகிறது. உலகில் தான் செய்ய வேண்டியவை எவை என்பதை அறிவு, மனத்திற்கு நன்கு எடுத்துக் காட்டுகிறது; இன்னும் வலுவாகச் செய்வதற்கு மனத் தில் ஊக்கமூட்டுகிறவாறு அறிவு ஊட்டச் சத்தினை மனத்திற்குத் தந்து தெம்பூட்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். செல்வம் குறையுமானால் செலவினங்களைக் குறைக்க வேண்டிய கட்டாயம் வரும் எனச் சொல்ல வேண்டியதில்லை.



ஆனால், எந்தச் செலவினங்களைக் குறைப்பது? ஒப்புரவையா? இல்லை. எல்லாச் செலவுகளையும் முழுவதும் குறைத்தாலும் ஒப்புரவுக்கு ஆகும் செலவை அறிவுடையவர்கள் குறைக்கமாட்டார்கள். ஏனெனில் ஒப்புரவுப் பண்பு மனிதப் பண்பின் அடிப்படையாக அமைய வேண்டிய ஒன்றாகும். ஒப்புரவு செய்வது எப்படியான காலத்தில் இப்படித் தான் செய்யவேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்குள் அடங்குவதில்லை. சமுதாயத்திற்குச் செய்யும் நன்மைகளைக் காலம் நேரம் பார்த்துக் கொண்டு காலம் கழிக்காமல் காலா காலத்தில் அவ்வப்போது உடனுக்குடன் செய்ய வேண்டும். தீராப்பசியுடைய ஒருவன் வந்தால்,அவனை இரண்டு நாட்கள் கழித்து வா எனக் கூறலாமா? அப்பொழுது தான் என்னால் ஆகுமெனச் சொன்னால் அவன் நிலை என்ன? செல்வம் இல்லையாயினும் தன்னாலியன்ற அளவு தன்னிடம் உள்ள உணவை வழங்கி அவன் துன்பத்தை நீக்க நினைப்பான். இளையான்குடி மாறநாயனார் வரலாற்றைப் பெரும்பாலான தமிழர் அறிவர். எவ்வளவோ துன்பங்கள் அலை அலையாக வந்தும் விருந்தினர்க்கு உணவு தர வேண்டும் என்பதற்காக எத்தனை துன்பங்களை எதிர்த்துப் போராடினார். சமுதாயத்திற்கு நன்மைகள் செய்வதில் என்றும் பின் வாங்காமல் உறுதியாக நிற்றல் திண்மையான அறிவுடையார் செயலாகும். *இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்கடனறி காட்சியவர்* என்பது வள்ளுவர் குறள். ஒருவன் தன் வாழ்க்கையில் செய்யவேண்டியவை இவை இவை எனச் சிந்தனை செய்து,உண்மைகளை உணர்ந்து அறிவுச்சுடரால் ஒளிவிடுபவனானால் அவன் தன்னிடம் செல்வம் மிகக் குறைந்துகொண்டு இருப்பதை அறிந்தாலும் சமுதாயத்திற்கு உதவும் முறைகளில் தளர்ச்சியடையமாட்டான். சமுதாய நன்மைகளை எந்த நிலையிலிருந்தாலும் என்ன பாடுபட்டாவது செய்பவனே நுண்ணிய அறிவுடையவனாவான்.

தமிழ்நாட்டில் குமணன் என்ற குறுநில அரசன் வாழ்ந்தான். அவன் தம்பி பெயர் இளங்குமணன் அவனைக் கொன்றுவிட்டுத் தான் அரச பதவியைப் பெறச் சூழ்ச்சி செய்தான். அதனால் குமணன் காட்டிற்குச் சென்று மறைந்து வாழ்ந்தான். அப்பொழுது அவனிடம் சிறிது செல்வமும் இல்லை. அந்த நேரத்தில் புலவர் ஒருவர் அவனைப் பார்க்கப் போனார். அப்புலவர் வறுமையால் மிகவும் துன்புறுவதை உணர்ந்த குமணன் உள்ளம் குமுறியது. இடமோ காடு. பருவவேமா செல்வமில்லாத காலம்.உள்ளமோ ஒப்புரவு உள்ளம். ஆதலால் புலவரைப் பார்த்துத் தன் தலையைத் தன் தம்பியிடம் கொடுத்து அதன் மூலம் புலவருடைய துன்பத்தைப் போக்கிக் கொள்ளுமாறு குமணன் வேண்டுகிறான்.

ஆகவே, இடமும் காலமும் பாராமல் ஒப்புரவுள்ளம் படைத்தவர்கள் தம் நலத்தையும் மறந்து பிறர் நலத்திற்காகவே வாழ நினைக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றதன்றோ?, ஒப்புரவாளனுடைய வறுமை மனிதனுக்குக் கிடைத்த பெரும் ஆற்றல்களில் சிந்தனை தலைமையானதும் முதன்மையானதும் ஆகும். மற்ற உயிரினங்களுக்குக் கிடைக்காத பெரும் ஆற்றல் அது. விலங்குகளோ பறவைகளோ மற்ற உயிரினங்களுக்கு வரும் இன்ப,துன்பங்களுக்குரிய காரணங்களை அறியா. ஆனால், மனிதன் அவற்றை அறிந்து உணரும் ஆற்றல் பெற்றுள்ளமை அவனின் தனிப்பேறாகும். ஒவ்வொருவனும் தான்தான் அனுபவிக்க வேண்டியன என நினைத்து அவற்றை நுகரும்போது எதிர்பார்த்தது கிடைக்கவில்லையானால் அவன் அப்பொருளை அடையாததனால் வறுமையுடையவனாகத் தன்னை எண்ணித் துன்புறுகின்றான்.

ஒரு செல்வனுக்குப் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பது, அவனளவில் அது *சர்க்கரை வறுமை* யாகும். ஓர் ஏழை கூழுக்கு உப்பில்லை என வருந்துவது அவனளவில் அது *உப்பு வறுமை* யாகும். இவை போலவே ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான பொருள், அனுபவிப்பதற்குக் கிடைக்காத போது, அதனால் வறுமையுற்றவராகவே கருதி வாழ்வது சாதாரண மக்கள் இயல் பாகும். ஆகவே, வறுமைகள் பலவகைப்பட்டுள்ளன. ஆயினும் இங்கு வள்ளுவர் காட்டும் வறுமை மிகப் புதுமையானது. ஒரு குடும்பத்தார்க்குப் பல ஆண்டுகள் குழந்தைப் பேறே கிடைக்கவில்லை. குழந்தையில்லா வறுமை அவர்களை வாட்டியது.ஆண்டுகள் உருண்டோடின. பின் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. எவ்வளவு மகிழ்ச்சி! அதனை *நல்கூர்ந்தார் செல்வமகள்* எனக் கலித்தொகை பேசுகிறது. வறுமை நீங்கினால் கிடைக்கும் மகிழ்ச்சி அளவற்றது. பிறர் துன்பம் கண்டு மனம் கசிந்து உடனே அவருக்கு அதனை நீக்க நினைக்கும் இயல்பான அறிவு கொண்ட ஒப்புரவாளனுக்கு எது வறுமை என்பதை மிக அழகாக வள்ளுவர் காட்டுகிறார். தனக்கு ஒன்று இல்லை என அவன் மனம் வருந்தவில்லை. தனக்குக் கிடைக்காத தால் வறுமையுள்ளதாக அவன் கருதவும் இல்லை. ஆனால் பிறர் துன்பமுறும்போது அதனைப் போக்க முடியாத நிலை அவனுக்கு ஏற்படுமானால் அதனையே அவன் மிகமிக வறுமையாகக் கருதுகிறான். தன்னால் பிறருடைய துன்பத்தை போக்க இயலவில்லையே என வருந்தி அவ்வாறு இயலாத நிலையையே வறுமையாக கருதுகிறான். அதாவது தன்னிடத்தில் இல்லாமை, போதாமை காரணமாகத் தான் வருந்துவதுபற்றி அவன் கவலைப்படவில்லை. அவற்றை வறுமையாகவும் அவன் நினைக்கவில்லை. ஆனால் தான் பிறர்க்கு உதவ இயலாத நிலையில் இருப்பதையே வறுமையாகக் கருதுகிறான். (தொடரும்)

# இலங்கையில் 12 இலட்சம் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை - சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

இலங்கையில் உள்ள 12 இலட்சம் குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடுகள் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். காலம் கடந்த கொள்கை களை தொடர்ந்தும் கடைப்பிடிக்காது வீடற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களின வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக தனது தந்தையும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணசிங்க பிரேமதாச உரிய செயற்திட்டத்திற்கு அமைய உண்மையான நோக்கத்துடன் பணிகளை முன்னெடுத்து வந்தார். பாரியளவில் நிதியுதவிகளை பெற்று ஆயிரம், ஒரு இலட்சம், 10 இலட்சம் என வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுத்து வந்தார். உண்மையான தேவைகருதி செயற் பட்ட அவர் நாட்டில் வீடமைப்பு அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்களையும் ஏற்படுத்தினார், வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்காக தனது தந்தையினால் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு அதிகார சபையின் ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் ஊதியத்தைக் கூட வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் சஜித் பிரேமதாச மேலும் கூறியுள்ளார்.(ஓ-4)

# ஐ.நா.வின் விசாரணையில்.....

*12 ஆம் பக்கத் தொடர்ச்சி*

*கொடூர சித்திரவதைக்கு உள்ளாக்குதல், பாலியல் துஸ்பிரயோகம், அரசியல், இன, மத அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் தண்டனை வழங்குதல் போன்றன இதில் உள்ளடங்குகின்றன.*

*இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எவருக்கெதிராகவும் போர்க் குற்ற வழக்கை தாக்கல் செய்வது இலகுவானதல்ல. காரணம் யுத்தத்தின் தேவைக்காக சில செயற்பாடுகளை முன்னெடுத்ததாக அவர்கள் வாதிடக் கூடும்.*

*அதேபோல், போர்க் குற்றம் சம்பந்தமான வழக்குகளைத் தாக்கல் செய்ய குறிப்பிட்ட கால எல்லை வரையறுக்கப்படவில்லை. 25 வருடங்களுக்குப் பின்னரேனும் சாட்சியங்களை முன்வைத்தால் போர்க்குற்றங்களைச் சுமத்த முடியும். மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமாக வழக்குகளைத் தாக்கல் செய்ய பெரும் எண்ணிக்கையிலான குற்றங்களைச் செய்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.*

*இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை இதுவரை போர்க் குற்றச் சாட்டுக்களை சுமத்தவில்லை. ஐக்கிய நாடுகள் செயலாளர் நியமித்துள்ள குழுவும் அவ்வாறான குழு அல்ல. அந்தக் குழுவின் தலைவரான இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் மர்சூகி தருஸ்மன் மாத்திரமல்லாது ஏனைய உறுப்பினர்களும் போர்க் குற்ற சூழ்நிலை சம்பந்தமாக அதிக அனுபவத்தைக் கொண்டுள்ளனர். இவர்கள் இலங்கைக்கு பாதகமான, பொய்யான அறிக்கைகளை சமர்ப்பிப்பார்கள் என எண்ண முடியாது. அத்துடன், உண்மையை நீண்ட நாளைக்கு மறைக்க முடியாது என்பதே நாம் அறிந்த விடயமாகும். ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவுடன் ஒத்துழைப்புடன் செயற்பட இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருந்தால் இலங்கைக்கு கிடைத்திருக்க வேண்டியது பாதகமல்ல, சாதகமாகும்.*

# தொழிலாளர் உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக அமெரிக்காவுக்கு பதிலளிக்க இலங்கை தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் தொழிலாளர் உரிமைகள் மீறப்படுவதாக அமெரிக்க அரசாங்கத்திடம் அமெரிக்க தொழிற்சங்கமொன்று தெரிவித்த புகார் தொடர்பாக கூட்டாக பதிலளிப்பதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு, வர்த்தக வாணிப அமைச்சு மற்றும் தொழிலாளர் விவகார அமைச்சு என்பன தயாராகி வருகின்றன.

சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் ஒன்றியம் (FTZWU) தெரிவித்த புகாரொன்றையடுத்து அமெரிக்க கைத்தொழில் நிறுவனங்களின் தொழிலாளர் கவுன்ஸில் அமெரிக்க அரசாங்கத் திடம் இது தொடர்பாக மனுவொன்றைக் கையளித்திருந்தது.

இதேவேளை இலங்கையில் தொழிலாளர் உரிமைகள் தீவிரமாக மீறப்படுவதாக (FTZWU) தலைவர் அன்டன் டி மார்கஸ் டெய்லிமிரருக்குத் தெரிவித்துள்ளார். சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் சங்கம் அமைப்பதற்கும் கூட்டாக பேரம் பேசுவதற்கும் தடைவிதிக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இவ்விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த மூவரடங்கிய குழுவொன்று இம்மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது. அக்குழுவினர் தொழிற்சங்கங்கள், அரசாங்கப் பிரமுகர்கள் தொழில்தருநர்கள் ஆகியோருடன் கலந்துரையாடவுள்ளனர்.

பின்னர் வோஷிங்டனின் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இது குறித்து பகிரங்க விவாதம் நடைபெறவுள்ளது எனவும் அன்டன் டி மார்க் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையின் புகழை கெடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் நிதியளிக்கப்பட்ட திட்டமொன்றை(FTZWU) முன்னெடுத்துச் செல்கிறது என அமைச்சர் காமினி லொக்குகே குற்றம் சுமத்தியுள்ளார். 2008 ஆம் ஆண்டு (FTZWU) சமர்ப்பித்த மனுவை அமெரிக்க கைத்தொழில் நிறுவனங்களின் தொழிலாளர் கவுன்ஸில் புறக்கணித்ததாகவும் ஆனால் அன்டன் மார்கஸ் 2009 ஆம் ஆண்டிலும் இவ்விடயத்தை மீண்டும் கிளப்பியதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## முன்னோடிப் பரீட்சையும் வழிகாட்டலும்

(பொலிகண்டி)

அல்வாய் ராவணந்துறை ஆலடிப் பிள்ளையார் கோவில் இந்து இளைஞர் மன்றத்தினால், க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையும் வழிகாட்டலும் யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கும் இதே வேளை தமிழ்மொழி பாடத்திற்கான பரீட்சையும் இந்நேரத்திற்கமைவாக நடைபெறும்.

இப்பரீட்சையில் அதியுயர் புள்ளி பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதோடு புவியியல்,அரசியல், நாடகமும் அரங்கியலும், இந்துநாகரிகம், அளவையியல் ,பொருளியல் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் பின்னர் நடைபெறும்.

இதில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொண்டுபயன்பெறுமாறு இந்து இளைஞர் மன்றத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-2-107)

## பொதுக்கூட்டம்

(மிருசுவில்)

கரம்பக வீரபத்திரர் ஆலய பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் ; யாவரையும் தவறாது சமுகம் தரும்படி நிர்வாக சபையினர் அறிவிக்கின்றனர். (ஓ-2-62)

# இறுதி நேரத்தில் பிரபாகரனின் அருகில் இருந்த பாலகுமார் எங்கே?

“அழிவுகளில் இருந்து மீள வேண்டும் என்பது எவருக்கும் ஏற்படும் முன்னர் எமது தேசியத் தலைவருக்கு ஏற்பட்டு இருக்கிறது. இது மிகைப்படுத் தப்பட்ட செய்தி


பாலகுமார்

அல்ல என்பது அனைத்துத் தளபதிகளுக்கும் தொண்டர்களுக்கும் தெரியும். தன் சொந்தப் பாதுகாப்பையும் புறந்தள்ளி அவர் செயற்பட்டது. எல்லோருக்கும் தெரியும். மிஞ்சியோரும் மிஞ்சாமல் இறந்தோரும் மீட்கப்பட்ட வரலாறும் அனைவருக்கும் தெரியும்!”

2004- டிசம்பர் மாதம் சுனாமிப் பேரலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டதாக செய்தி கிளம்பிய வேளையில் அதனை அறவே மறுத்து ‘புலிகளின் குரல்’ வானொலியில் வே. பாலகுமார் வார்த்த நம்பிக்கை இது. அதன் பிறகுதான் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்பதை உலகத் தமிழினம் நம்பத் தொடங்கியது. காரணம்..... வே.பாலகுமார் அந்த அளவுக்கு நம்பகமான சீனியர். இப்போது அவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதை சொல்ல ஆள் இல்லை என்பதுதான் துயரம்!

செய்தி கிளம்பியது. கொழும்பு ஊடகங்களும் இதுபற்றி தொடர்ந்து எழுதி வந்தன.

சில மாதங்களுக்கு முன்பு முகாமில் இருந்து தப்பி வந்த புலி உறுப்பினர்கள் “சந்தேகத்தின் பேரில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலிகளை சிங்கள இராணுவம் சித்திரவதைப்படுத்தி வருகிறது. புலிகளின் முக்கியத் தளபதிகளும் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் அங்கே இருக்கிறார்கள். பாலகுமார், யோகி ஆகியோருக்குப் போரில் படுகாயம் ஏற்பட்டது. அவர்களுக்கு போதிய சிகிச்சையை வழங்கி வரும் சிங்கள இராணுவம் அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது. கவிஞர் இரத்தினதுரை


யோகி


இரத்தினதுரை

முகாம் மக்களோடு கலந்திருக்கிறார்! எனச் சொன்னார்கள்!”

இந்த நிலையில்தான்.திடீரென ஒரு குண்டை வீசி இருக்கிறார். இலங்கையின் சிறைச்சாலைகள் மீள்

புலித் தலைவர்களும் கொல்லப்பட்டதாக ஆரம்பம்தொட்டே அடித்துச் சொல்லும் சிங்களத் தரப்பு. இன்று வரை அதற்கான மரணச் சான்றிதழ்களை இந்தியாவிடம் கொடுக்கவில்லை.

பிரபாகரனின் மனைவி மதிவதனி கொல்லப்பட்டதாகவும் அவருடைய உடல் கிடைக்கவில்லை எனவும் அரசுத் தரப்பில் அதிகாரபூர்வமாகவே செய்தி வெளியிடப்பட்டது. அடுத்த சில வாரங்களிலேயே அந்தப் பதற்றம் அடங்க... பிரபாகரனின் இளைய மகனான பாலச்சந்திரனின் முகத்தை ஒரு சிறுவனின் உடலோடு கிராபிக்ஸ் செய்து இணையதளத்தில் வெளியிட்டு ஒட்டுமொத்த ஈழ ஆதரவாளர்களையும் உலுக்கிப்போட்டது சிங்கள் சதி. கொஞ்சம் இடைவெளிவிட்டு புலிகளின் நிதர்சனம் ஒளிபரப்புத் துறையில் பணியாற்றி போரில் மடிந்த இசைப்பிரியாவின் சடலத்தைக் காட்டி பிரபாகரனின் மகள் துவாரகாவும் கொல்லப்பட்டார் எனச் சொல்லி பகீர் கிளப்பினார்கள். பாலகுமார், யோகி ஆகியோர்

போரில் கொல்லப்பட்டு இருந்தால் அவருடைய சடலத்தைக் காட்டி சிங்கள அரசு கொக்கரிக்கத் தவறி இருக்காது!” என்கிறார்கள் உறுதியாக.


பிரபாகரன்

ஈழப் போர் உக்கிரமெடுத்த காலகட்டங்களை நினைவுகூரும் சிலர் உடையார்கட்டுப் பகுதியில் நடந்த கொடூரத் தாக்குதலில் பாலகுமார் வயிற்றில் படுகாயம் ஏற்பட்டது. அப்போதே அவர் கொல்லப்பட்டதாக சொன்னது சிங்கள இராணுவம். ஆனால் பெரும் சிரத்தையெடுத்து அவரைக் காப்பாற்றிய புலிகளின் மருத்துவப் பிரிவு தேசியத் தலைவர் பிரபாகரனிடம் கொண்டு சேர்த்தது. இறுதி நேரங்களில் பிரபாகரனுக்கு மிக அருகில் இருந்து பன்னாட்டுப் பிரதிநிதிகளிடம் பேசி போர் நிறுத்த முன்னெடுப்புகளைச் செய்தவர் பாலகுமார்.

அதேபோல் போர் ஆய்வு மையப் பொறுப்பாளரான யோகியும் கடைசிக் கட்ட சூழல் வரை பன்னாட்டு ஆட்களுடன்

## புலிகளின் மூத்த உறுப்பினர்கள் சாட்சிகளாகி விட்டால்.....

ஆரம்பத்தில் ‘ஈரோஸ்’ அமைப்புக்குத் தலைவராக இருந்தவர் வே. பாலகுமார். ‘இந்திய அமைதிப் படை’ஈழத்தில் வெறியாட்டம் போட்ட இக்கட்டான நேரத்தில் புலிகள் அமைப்பில் இணைந்து தனது ஆதரவுத் தரப்பினரையும் புலிகளின் பின்னால் அணிவகுக்கச் செய்தவர். உலகளாவிய அரசியல் முன்னெடுப்புகளைப்பற்றி நல்ல ஆலோசகராக பிரபாகரனுக்கு உரைத்தவர். கடந்த ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி ஈழப் போர் முடிவுக்கு வந்தபோது புலிகளின் முக்கியத் தலைவர்கள் என்ன ஆனார்கள் என்பது இன்றுவரை நீடிக்கும் புதிராக இருக்கிறது. அதேபோல் புலிகளின் சிறப்பு உறுப்பினர் வே. பாலகுமார், போர் ஆய்வுமையப் பொறுப்பாளர் யோகி, பண்பாட்டுக் குழுத் தலைவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை போன்றவர்கள் என்ன ஆனார்கள் என்பதையும் சிங்கள அரசுத் தரப்பு அறிவிக்கவில்லை.

இதற்கிடையில் போரின் கடைசி நாளில் புலிகள் பலரும் சயனைட் சாப்பிட்டும் . கரும்புலிகளாக மாறியும் உயிர் துறக்க.. பாலகுமார், யோகி உள்ளிட்ட மூத்த புள்ளிகளை இராணுவம் உயிரோடு பிடித்ததாகவும் அவர்களைப் பொது முகாம்களில் அடைக்காமல் கொழும்பில் உள்ள இராணுவ இரகசிய அறைகளில் வைத்து சித்திரவதைகள் செய்வதாகவும்

அமைப்பு மற்றும் புனர்வாழ்வுத்துறை அமைச்சரான டியூ.குணசேகர சமீபத்தில் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் விசிட் அடித்துத் திரும்பிய அவர் “போரினால் கணவனை இழந்த பெண்களைப் பார்வையிடுவதற்காகப் போயிருந்தேன். அங்கே நான் சந்தித்த கணவரை இழந்த பெண்களில் வே. பாலகுமார், யோகி ஆகியோரின் மனைவிகளும் அடங்கும்!” எனச் சொல்லி இருக்கிறார்.

“பாலகுமார், யோகி ஆகியோர் எங்கே எப்படி கொல்லப்பட்டார்கள்?” என்கிற கேள்விக்கு “பாலகுமார் கடந்த ஆண்டு வன்னி கிழக்குப் பகுதியில் நடந்த போரின்போதே கொல்லப்பட்டுவிட்டார்!” என்று மட்டும் சொன்ன குணசேகர, யோகி குறித்தோ பாலகுமார் எப்படிக் கொல்லப்பட்டார் என்பது குறித்தோ ஏதும் சொல்லவில்லை.

இது குறித்து இலங்கையின் தமிழ்ப் பிரதிநிதிகள் “ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழர்களை மனரீதியாகத்துவளச் செய்யும் செயல்களை சிங்கள அரசு திட்டமிட்டுச் செய்து வருகிறது. பிரபாகரன், பொட்டு அம்மான் உள்ளிட்ட அத்தனை

கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுவதும் இந்த வகையிலான சதிதான்.

ஐ.நா.வின் விசாரணைக் குழு இலங்கைக்குள் நுழையக் கூடாது எனப் போர்க்குரல் எழுப்பியபடியே போர்க் குற்றத் தடயங்களை அடியோடு அழித்து வருகிறது சிங்கள அரசு. இதை மீறி ஐ.நா.வின் விசாரணைக் குழு இலங்கையின் போர்க் குற்றம் குறித்து விசாரிக்கும்போது, புலிகளின் முக்கிய உறுப்பினர்களிடமும் விசாரணை நடத்தப்படும். குறிப்பாக இறுதிக்கட்ட போரின்போது சர்வதேச சமூகத்திடம் போராடியவர் யோகி.

தொடர்பில் இருந்தார். கவிஞர் இரத்தினதுரை மக்களோடு மக்களாக வற்புறுத்தி அனுப்பப்பட்டார். புலிகளின் இறுதி நேர இக்கட்டுகளையும் இராணுவ சதிகளையும் ஒரு சேரப் பார்த்த சாட்சிகள் இந்த மூத்த புலிகள்தான். பாலகுமார், யோகி ஆகியோர் கொல்லப்பட்டதாகச் சொன்ன இலங்கை அமைச்சர் குணசேகர, அந்தவிவகாரம் பெரிய சர்ச்சையான பிறகு எவ்வித பதிலும் சொல்லவில்லை.

ஆனால், ‘விடுதலைப்புலிகளின் அமைப்பைச்சேர்ந்த கணவனை இழந்தோர் குறித்துநான்

**ஜூனியர் விகடன்**

அதுபோல் இலங்கையின் கடைசிக் கட்ட சமாதான மோசடிகளை நன்கு அறிந்தவர் பாலகுமார். இவர்களின் சாட்சியங்கள் என்றைக்கு இருந்தாலும் இலங்கைக்கு மோசமான விளைவை உண்டாக்கும். அதனால்தான் அவர்கள் கொல்லபட்டு விட்டதாகத் திட்டமிட்டுப் பரப்புகிறது சிங்கள அரசு. உண்மையாகவேபாலகுமார்


விசாரிக்கவில்லை’ என்று மட்டும் மழுப்பலாகச் சொன்னார். இப்போது கேணல் ராம், கே.பி உள்ளிட்டோரை வைத்து தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களை விதைத்து வரும் சிங்கள அரசு, இனவெறிக்கொடூரங்களை பக்கத்திலிருந்து பார்த்த சாட்சிகளாக இருக்கும் மூத்த புலிகளை என்ன செய்யக் காத்திருக்கிறதோ?” என்கிறார் கள் பதற்றம் குறையாமல்!

அல்வாய் வேவிலந்தை

# முத்துமாரி அம்மன் ஆலய

## தீர்த்த உற்சவ சிறப்பு மலர் - 25.07.2010






### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



அல்வாயூரின் கண் அமைந்துள்ளது வேவிலந்தை முத்துமாரியம்பாள் ஆலயம். ஆயிரம் நாமம் கொண்டவள் எம் அன்னை. இன்று ஆழிக் கடலிலே நீராடச் செல்கின்ற காட்சியைக் காண ஆயிரமாயிரம் அடியவர்கள் திரள் திரளாய் குவிந்துள்ளார்கள். நீராடி அன்னை பச்சை உடை உடுத்தி வரும் காட்சியை காணாத கண்ணும் ஒரு கண்ணோ. அம்பாளை ஊர்வலமாய் அழைத்து வரும் போது இளைஞர்களெல்லாம் ஆனந்தக்காவடி எடுத்து ஆடிவருவார்கள். அடியவர்களின் இல்லமெல்லாம் அன்பைச் சொரிபவள். அன்னை வேவிலந்தை என்ற நாமம் கொண்ட நாச்சியார் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியிலே அருள் புரிந்து வந்திடுவாள். இவ் அழகிய காட்சியைக் காண யாழ். மக்களெல்லாம் தேடி மோதி வந்திடுவீர். அரோகரா கோசங்களும் மாரித் தாயே மாரித் தாயே என்ற ஒலியும் வானத்தைப் பிளந்து எம்மை நிறைவடையச் செய்வாள்.

பிரம்மஸ்ரீ சதா சிவ சிவகுமாரக் குருக்கள்
ஆலய பிரதம குரு

### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



வடமராட்சி மண்ணிலே மிகவும் பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயமாக அல்வாய் வேவிலந்தை முத்துமாரிஅம்மன்ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் மிகவும் புனிதத் தன்மையை வெளிப்படுத்தி அடியவர்களினால் தினந்தோறும் பக்தியுடன் வழிபடப்பட்டு வருகின்றது. இன்று அம்பாள் இந்து சமுத்திரமான பருத்தித்துறை வியாபாரி மூலை சமுத்திரப் பகுதியில் தீர்த்த நீராடி அடியவர்களுக்கு அருள் புரியட்டும். அம்பாளின் அருளை பெற புலம் பெயர் நாடுகளில் இருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் எம் அடியவர்கள்அலை அலையாக வருகை தந்துள்ளமை அம்பாளுக்கு மகிழ்ச்சியே. அல்வாய் பதியினிலே வீற்றிருக்கும் முத்துமாரி அம்பாள் இவ்வூர் மக்களினதும் அடியவர்களினதும் பாதுகாவலராகவும்விளங்குபவள். இவ்வாலயம் மூன்று நூற்றாண்டுகளுக்குமுன் பழைமை வாய்ந்த ஆலயமாக விளங்குவதுடன் இன்றுமிகவும் அழகிய தோற்றத்துடன் காட்சியளிப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியே.

இரா. வரதீஸ்வரன்
பருத்தித்துறை பிரதேச செயலர்

### ஆலய பரிபாலன சபை தலைவரின் வாழ்த்து செய்தி



அல்வாய் பதியில் வீற்றிருக்கும் முத்துமாரி அம்பாள் இன்று இந்து சமுத்திரத்தின் ஒரு பகுதியான வடமராட்சியில் உள்ள வியாபாரி மூலை பகுதியில் நீராடுகின்றாள். அம்பாளின்அருட்கடாட்சத்தை பெறும் பொருட்டு புலம்பெயர் நாடுகளில் உள்ள அம்பாளின் அடியவர்கள் ஆலயத்துக்கு வருகைதந்துள்ளமை பெரு மகிழ்வைத் தருகின்றது. இன்று அலங்கரிக்க பட்ட மேடையில் அமர்ந்து அல்வாயூரை வலம் வரும் அம்பாள் எமது ஊர் மக்களுக்கும் அடியவர்களுக்கும் அருள் புரியவுள்ளாள். அம்பாளை தரிசிப்பதற்கு பெரும் திரளான அடியவர்கள் அம்பாளின் அருளை பெற்று தமது நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றுவார்கள். ஊர் மக்களின் பாதுகாவலராகவும் எமக்கெல்லாம் முதற் தெய்வமாகவும் விளங்குகின்றாள் எம் முத்துமாரி அம்மாள் தாய். எக்காரியத்தையும் செய்யும் போது முத்துமாரி அம்பாளை வணங்கிச் சென்றால் அக்காரியம் சித்தியடையும் என்பது எமது அசையாத நம்பிக்கை. இன்று எம் ஊரை வலம் வரும் அம்பாளுக்கு அடியவர்கள் காவடி, கரகம், பாற்செம்பு, தீ மிதிப்பு போன்ற தமது நேர்த்திக்கடன்களை செலுத்தி அம்பாளின் அருளை பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப் புடனும் வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

சி. கணேசமூர்த்தி
தலைவர், ஆலயபரிபாலன சபை

மலரமைப்பு :- செல்வதீபன்

## தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

பிரியங்கா ஸ்ரோர்ஸ்
அல்வாய் வீதி,
அல்வாய்.

மணி நெற் கொம்
மதிய மகா வித்தியாலயம்,
நெல்லியடி.
T.P -0212264877

The Phone Shop
Main Street,
Nelliady.
T.P - 0212263770

கஜன் ஸ்ரோர்ஸ்
மாலிசந்தி.

இந்து சமுத்திரத்தில் நீராடும் முத்துமாரி தாய்
எமது ஊர் மக்கள் சீரும் சிறப்புடனும் வாழ
அருள் புரியட்டும்.
செல்லம்மா அரைக்கும் ஆலை
உரிமையாளர் :-
S. புவனேந்திரன்
அல்வாய் வீதி,
அல்வாய்.

துர்கா நகைப்பூங்கா
தங்கப் பவுண் நகை வியாபாரம்
T.P -0779525392
நெல்லியடி.

கேசவன் சில்க்
kesavan Silk
பிரதான வீதி,
நெல்லியடி.
T.P -0212264442
புலோலி.

உங்கள் சகல விதமான
நகை தேவைகளிற்கும்
உங்கள் நம்பிக்கை வென்ற
அம்பிகை நகை மாடம்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
T.P -0776569559

சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
பிரதான வீதி,
நெல்லியடி.
T.P 0212263223

ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்
அல்வாய் கிழக்கு
அல்வாய்.

THE WELDING SHOP
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

நவசக்தி பல் பொருள் வாணிபம்
அல்வாய் வீதி,
முத்துமாரி அம்மன் கோவிலடி.

## திரைவிமர்சனம்

# மிளகா




அடாவடி கும்பல் ஒன்றால் அர்த்தம் இல்லாமல் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இளம்பெண் ஒருத்திக்கு, தன்னை வருத்திக் கொண்டாலும் வருத்தம் இல்லாமல் விடுதலை பெற்று தந்ததுடன் நிறுத்திக் கொள்ளாமல் பொருத்தமான ஜோடியாகும் இளைஞனின் கதைதான் மிளகா.

மதுரை பக்கம் அழகர்மலையில் மிளகாய் வண்டி வைத்திருக்கும் வயசான அப்பாவிற்கு ஒத்தாசையாக இல்லாமல் ஓயாமல் உபத்திரம் தரும் பிள்ளை அழகர். ஆனால் நண்பர்கள் யாவருக்கும் நல்லவர். தன் நண்பன் ஈசு எனும் ஈஸ்வரனின் பேர்னிச்சர் கம்பனி நட்டம் ஆகும் அளவுக்கு பதினெட்டரை இலட்சம் ரூபாய்க்கு பொருட்கள் வாங்கிக் கொண்டு பணத்தை திருப்பி கட்டாதவர்களிடம் கடனை வசூலிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு களம் இறங்குகிறார் அழகர்.

அவரது அடாவடித்தனத்தாலும், அதில் தென்படும் நியாய தர்மத்திலும் ஈர்க்கப்பட்டு, தானும் தன் குடும்பமும் அயோக்கிய கும்பல் ஒன்றால் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையை சொல்கிறார் கதாநாயகி தேன்மொழி. தேன்மொழிக்காக மதுரையையே கலக்கும் அந்த அயோக்கிய அண்ணன் – தம்பி கும்பலிடம் மோதும் அழகரும் அவரது நண்பர்களும் சந்திக்கும் சோதனைகளும், சாதனைகளும்தான் மிளகா படத்தின் மீதிக்கதை!

நாளை எனும் படத்தில் சில வருடங்களுக்கு முன் ஷாலினி அஜித்தின் சகோதரர் ரிச்சர்டுடன் இரண்டு நாயகர்களில் ஒருவராக அறிமுகமாகிய ஒளிப்பதிவாளர் நட்ராஜ்தான் இதில் ஒரே நாயகர். பூங்கொடி, சுஜா என இரண்டு நாயகிகள். அழகராக வரும் நட்ராஜும் சரி... தேன்மொழியாக வரும் பூங்கொடியும் சரி... வீட்டு உரிமையாளராக செளமியாவாக வரும் சுஜாவும் சரி... சபாஷ்.. சரியான போட்டி என சொல்லும் அளவுக்கு நடித்திருக்கின்றனர்.நட்ராஜின் நண்பர்கள் சிங்கம்புலி, ஜெகன்னாத், மாயி சுந்தர் அண்ட் கோவினர் செய்யும் காமடி கலாட்டாக்கள் படம் முழுக்க சிரிப்பலையை எழுப்பி வயிற்றை புண்ணாக்கி விடுகின்றன என்றால் மிகையல்ல!

அண்ணன்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்போகும் நீதிபதியை போட்டுத் தள்ளிவிட்டு, சிறைக்கு போய் திரும்பி, பின் பைத்தியமாகிகத்தும் ரவிமரியாவும் சரி.. அவரது சகோதரர்கள் நான் கடவுள் ராஜேந்திரன், அஞ்சாதே ஸ்ரீதர், ஆரோக்யதாஸ் ஆகியோரும் சரி... பார்த்தாலே பயமுறுத்தும்படியான வில்லன்கள்.



ஆனாலும் அடுத்த வீட்டுப் பெண்ணை அடைத்து வைத்துக் கொண்டும், அவளது அப்பா – அம்மா – தம்பியை கடத்தி வைத்துக் கொண்டும் அவர்கள் படுத்தும் பாடு ஏன்? அந்த ஊரில் நல்ல பொலிஸ் நாலு பேர் கூட கிடையாதா? எனும் கேள்வியை எழுப்புகிறது.

"மிளகா" அழகர் – நடராஜின் மிளகா வண்டி அப்பாவாக ஜி.எம்.குமார், சின்ன வீட்டுக்கு கடன் வாங்கிய வகையில் கட்டை விரலை அடுத்தடுத்து பறிகொடுத்து பரிதவிக்கும் தாதா இளவரசு அவர், தனக்கு ஒத்து வராதவர்களுக்கு தரும் வாழைப்பழ அதிரடி அடாவடி என மிளகா படம் முழுக்க காரசாரமாகவே இருக்கிறது.

கவர்ச்சி ரசமாக சபேஷ் – முரளியின் இசையில் ஒலிக்கும் பாடல்களும், அதற்கு பாலாஜி வீ.ரங்காவின் ஒளிப்பதிவும் ஆறுதல். இசை, ஒளிப்பதிவு மாதிரியே வீ.ஜெய்சங்கரின் பக்காவான படத்தொகுப்பும், சுப்ரீம் சுந்தரின் சண்டை பயிற்சியும் படத்தின் பெரிய ப்ளஸ்கள்.

**மொத்தத்தில் "மிளகா" ரொம்பவே "அழகா" வந்திருக்கிறது!**

# நயன் நடிக்க பிரபுதேவா தடை



மறைந்த கன்னட சுப்பர் ஸ்டார் ராஜ்குமாரின் மகனும், தற்போதைய சூப்பர் ஸ்டாருமான சிவராஜ்குமாருடன் இணைந்து நடிக்க வேண்டாம் என பிரபுதேவா அறிவுறுத்தியதால் அந்தப் படத்தில் நடிக்க மறுத்து விட்டாராம் நயன்.

பிரபுதேவா, நயன் நட்பு குறித்து விளக்கமாக சொல்ல வேண்டியதில்லை.அனைவரும் அறிந்ததே.

தற்போது பிரபுதேவாவின் அட்வைஸ்படிதான் சினிமா தொடர்பான முடிவுகளை எடுக்கிறாராம் நயன்தாரா. ஆனாலும் அவரைத் தேடி பெரிய அளவில் வாய்ப்புகளும் குவிந்துவிடவில்லை. தமிழில் பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தில் மட்டுமே நடித்து வருகிறார். அந்தப் படத்தின் படப்பிடிப்பு போதுதான் அவருக்கு திடீரென மயக்கம் வந்து விழுந்து விட்டார். நன்கு ஓய்வெடுக்குமாறு டாக்டர்கள் கூறியதன் பேரில் தற்போது ஓய்வில் இருப்பதாக தெரிகிறது.

வேறு படம் எதுவும் அவர் வசம் இல்லை. இந்த நிலையில் கன்னடத்திலிருந்து அவரைத் தேடி மெகா வாய்ப்பு வந்தது. படத்தின் நாயகன் சிவராஜ்குமார். படத்தின் பெயர் ஜோகய்யா. இது சிவராஜ்குமாரின் 100வது படம்.


## சிம்பு பெயர் மாற்றம்



தனது அப்பா டி.ராஜேந்தரை தொடர்ந்து சிம்புவும் தனது பெயரை மாற்றி வைத்துள்ளார். சிம்பு தனது பெயரை எஸ். டி. ஆர் என சுருக்கியுள்ளார். தனது தந்தையை டி.ஆர்., என அழைத்தது போல தன்னையும் ரசிகர்கள் இனி எஸ்டிஆர் என்ற பெயரிலேயே அழைக்குமாறு தனது ரசிகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதுமட்டுமல்ல விண்ணைத் தாண்டி வருவாயா படத்திற்குப் பின்னர் சிம்புவின் இமேஜ் பல மடங்கு உயர்ந்துள்ளதால், சமூக சேவை நிறுவனங்கள் பலவும் சிம்புவிடம் உதவி கேட்டு வருகின்றன. பெயரை மாற்றியவுடன் எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர்., பாணியில் சமூக சேவையில் இறங்க திட்டமிட்டுள்ளாரோ....!!? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சூர்யா, ஜோதிகா தம்பதியினருக்கு இரண்டு வயதான 'தியா' என்ற பெண் குழந்தை உள்ளது. இரண்டாவதாக ஜூன் 6ம் திகதி அன்று சூர்யா, ஜோதிகா தம்பதியினருக்கு ஆண் குழந்தை பிறந்தது.

இந்நிலையில் இரண்டாவது ஆண் குழந்தைக்கு 'தேவ்' எனப் பெயரிட்டுள்ளனர் இதற்காக வீட்டிலேயே ஒரு சின்ன விழா போல் சூர்யா ஏற்பாடு செய்திருந்தார்.



## சிம்புவுடன் பரத்



'வானம்' படத்தில் சிம்புவுடன் நடிக்கிறார் பரத்.தெலுங்கில் அல்லு அர்ஜுன, மனோஜ், அனுஷ்கா நடித்து ஹிட்டான படம் 'வேதம்'. இந்தப் படம் 'வானம்' என்ற பெயரில் தமிழில் ரீமேக் ஆகிறது. சிம்பு ஹீரோவாக நடிக்கிறார். மற்றொரு ஹீரோ வேடத்தில் தெலுங்கில் நடித்த மனோஜ் நடிப்பார் என்று கூறப்பட்டது. அவர் விபத்தில் சிக்கியதால் மூன்று மாதம் ஓய்வெடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் கூறியுள்ளனர். இதையடுத்து அந்த கேரக்டரில் பரத் நடிக்கிறார். தெலுங்கில் 'வேதம்' படத்தை இயக்கிய கிருஷ் இயக்குகிறார். நான்கு வெவ்வேறு கதைகள், கிளைமாக்ஸில் ஒன்று சேரும் விதமாக இந்த படம் இருக்கும்.

ஒளி விளக்கு வைத்திருப்போர்,மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்களாக! – பிளேட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் மக்கள் தெளிவடைய வேண்டும்

வடக்கு மாகாண சபைத் தேர்தல் மிக விரைவில் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் தெரிகின்றன.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடக்கும் சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் – மாகாண சபை உறுப்பினர் என்ற அமைப்பிற்கே அதிகாரம் உரியதாகும்.

எனவே வடக்கு மாகாண சபைத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக தமிழ் மக்கள் கருதவேண்டும்.

வடக்கு மாகாண சபைக்கு பொருத்தமற்றவர்கள் தெரிவு செய்யப்படும்போது,அதனால் துன்பத்தை அனுபவிப்பவர்கள் தமிழ் மக்களாகவே இருப்பர்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை மக்கள் ஒருகணம் ஆராயவேண்டும்.

பொதுவில் தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் சுயநலத்தையே கருத்தில் கொண்டு செயற்படுகின்றன.

இவர்களிடம் பொது நோக்கம் கிடையாது. எனவே நடைபெறப்போகும் மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் போட்டியிடும் தமிழ்,முஸ்லிம் அரசியல் கட்சிகள் விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டு புத்திஜீவிகளிடம் மாகாண சபையை ஒப்படைக்க முன்வரவேண்டும்.

நாடாளுமன்றத்தில் ஆசனத்தைப் பெற்றிருப்பவர்கள் அதனை தமிழ் மக்களின் நலனுக்காக பயன்படுத்த வடக்கு மாகாண சபை புத்திஜீவிகளின் கைகளில் ஒப்படைப்பதன் மூலம் வடக்கு மாகாணத்தில் கல்வி,பொருளாதாரம், பண்பாட்டு விழுமியம் தொடர்பில் திட்டமிட்ட வகையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும்.

இதைவிடுத்து பதவி ஆசை பிடித்தவர்களிடம் வடக்கு மாகாண சபை கையளிக்கப்படுமாயின் தமிழ் மக்களின் எதிர்காலம் சூனியமானதாக இருக்குமென்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

யாழ்ப்பாணத்தில் தற்போது அரசியலில் நுழைவதற்குப் பலரும் விருப்பம் கொண்டுள்ளனர்.இந்த விருப்பத்தை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டவர்களின் எண்ணிக்கை சான்று பகரும்.

வடக்கு மாகாண சபை தேர்தலிலும் சிலர் பதவியை தட்டிப்பறிக்க முற்பட்டுள்ளதாக தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

எதுவாயினும் தேர்தல் பிரசாரம் ஒன்று இடம்பெறும்போது, பக்கசார்பற்ற முறையில் சரியானவர்களை மக்கள் இனம் காண்பதற்கான பிரசாரமும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதற்காக நீதிக்காகப் பாடுபடும் புத்திஜீவிகள் மேடையேறிப் பேசுவதற்கு தயாராக வேண்டும் – தயாராகுங்குகள்.

# அகதிகள் கப்பல் கனடாவின் கரையை அண்மிப்பதை உறுதிப்படுத்துகிறது அமெரிக்கா

(கொழும்பு)

உலகின் பார்வையையே தன் பக்கம் திருப்பி கடந்த நான்கு மாதங்களாக இங்கே நிற்கிறது, அங்கே நிற்கிறது என ஊடகங்களால் வர்ணிக்கப்பட்ட தாய்லாந்தில் பதியப்பட்ட கப்பல் கனடாவின் கரையை எப்போதும் அடையலாம் என அமெரிக்க பசுபிக் பிராந்திய கடற் கண்காணிப்புப் பிரிவு உறுதி செய்துள்ளது. விடுதலைப்புலிகளின் கப்பல் என இலங்கை அரசாலும் மேற்குலக ஊடகங்களாலும் வர்ணிக்கப்பட்ட இக் கப்பலில் அகதி அந்தஸ்து கோரும் 200 க்கும் மேற்பட்டோர் பயணிக்கிறார்கள் என ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன.

இக் கப்பலின் நிலைபற்றி கருத்துத் தெரிவித்த மேற்படி அமெரிக்க அதிகாரி தாய்லாந்துக் கொடியுடன் பயணித்துக் கொண்டிருக்கும் இக்கப்பல் கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியாவின் கரையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை தன்னால் உறுதிப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

மேற்படி அமெரிக்க பசுபிக் பிராந்தியக் கடற் கண்காணிப்புப் பிரிவு தனது எல்லைக்குட்பட்ட 12 கடல் மைல் தூரத்தையே கண்காணிப்பதால் இக் கப்பல் கரையை அண்மித்தவாறே பயணிக்கிறது என்றே நம்பப்படுகிறது.

கனடாவின் கடல் எல்லைக்குள் இக்கப்பல் நுழையும் வரை கனடாவால் இந்த விவகாரத்தில் ஒன்றுமே செய்ய முடியாது என்பதும் சர்வதேச நீர்ப்பரப்பிலிருந்து அது கனடாவின் நீர்ப்பரப்பிற்குள் நுழைய எத்தனிக்கும் போது கனடியக் கடற்படையால் தடுத்து நிறுத்த முடியும் என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அதிகாரி தெரிவித்தார்.

மேற்படி கப்பல் விவகாரம் தொடர்பான விசாரணையில் பல நாடுகள் பங்களிப்புச் செய்து இக்கப்பலின் பயணத்தைக் கண்காணித்ததுடன் தமிழர்களின் வரலாற்றில் இவ்வாறு ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட ஒரு கப்பல் இவ்வளவு அகதிகளுடன் பயணிப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த கப்பல் விவகாரம் கனடிய அரசியலிலும் சர்வதேச அரசியலிலும் பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்பத்தும் என்பதோடு இலங்கையின் தமிழர்கள் தொடர்பான வன்மப் பிரசாரத்தை அதிகரிக்கும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கைதடி)

கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையில் அங்கு கடமைபுரியும் பணியாளர்களால், டெங்கு பரவக் கூடிய இடங்கள், வைத்தியசாலைப்பகுதியில் இனம் காணப்பட்டு, சிரமதான அடிப்படையில் பிரதி வியாழக்கிழமைகளில் ஒருமணி நேரம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்தோடு, இலகு வேலைத் திட்டத்தின் கீழ் கைதடி தெற்கு கிராம சேவையாளர் பிரிவு மக்களும் அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-2)

◆ ◆ ◆

பருத்தித்துறை நகரப் பகுதியில் நேற்று காலை அப்பகுதி பொலிஸ் உத்தியோகத்தர்களால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸ் தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரி லலித் புசல்ல தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பரு.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆருஸ், சுகாதார பரிசோதகர்கள், சிவபாலன், கமலகுமார், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (ஓ

# வீட்டில் கசிப்பு வைத்திருந்தவருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

துன்னாலையைச் சேர்ந்த இரு பெண்கள், வீட்டில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நெல்லியடி பொலிஸாரினால், கைது செய்யப்பட்டு, நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா முதலாம் குற்றவாளியை விசாரித்த போது, குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டமையால், குற்றவாளிக்கு 75 ஆயிரம் ரூபா அபராதமும், செலுத்தத் தவறின் 6 மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்.

இரண்டாம் குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொள்ளாமையால், 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்லுமாறும் தீர்ப்பளித்தார். இவருடைய வழக்கை விசாரணை அடுத்த தவணைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஓ-2-24)

# கைதடி வைத்தியசாலையில் அக்குபஞ்சர் சிகிச்சை


(கைதடி)

கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியாசாலையில் கொரியன் அக்குபஞ்சர் சிகிச்சையானது, அங்கு பணிபுரியும் வைத்தியர்களால் வாரத்தில் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வைத்தியர்களின் பார்வைக்குட்படுத்தப்பட்ட நோயாளிகள் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இந்தச் சிகிச்சையைப் பெற்று பயன்பெறலாம் என அறிவிக்கப்படுகின்றது. (ஓ-2)

# செபிக்கக் கற்றுத் தாரும்

## பரமபிதா காட்டிய பாதை



கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும், அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

ஆம், மேற்கூறப்பட்ட குறள் நம் அனைவருக்கும் மிகவும் பரிட்சயமானது. அதன் பொருளையும் புரிந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் அதன்படி நடக்கின்றோமா என்பதுதான் கேள்வி.

ஆம் இன்று எல்லோரும் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தைவிட, கட்டாயத் தேவைதான் அனைவரையும் பள்ளிக்கூடங்களுக்குப் படையெடுக்க வைக்கிறது. இன்று கல்வி காசாக மாறிவிட்டது. ஆனாலும் நம் உள்ளத்தை ஒரு கேள்வி உறுத்திக் கொண்டே இருக்கின்றது. அன்று மக்கள் குறைவாகப் படித்திருந்தாலும் நிறைய கற்றிருந்தார்கள். ஆனால் இன்று நிறைய படித்திருந் தாலும் குறைந்தளவே கற்றுக் கொள்கிறார்கள். இதற்கு என்ன காரணம் சிந்தித்தோமா?

ஆம், இன்று வாழ்க்கைக் கல்வி போய் வேலைக் கல்வி, வியாபாரக் கல்வி, போட்டிக் கல்வியாகவும் மாறிவிட்டதால் வாழ்வின் மதிப்பீடுகள் குறைந்து கொண்டே வருகின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைய நற்செய்தி. வாசகமும் நமக்கு சவாலாக இருக்கின்றது. இயேசு சீடர்களுக்கு வாழ்க்கைக் கல்வி போன்று நல்ல மதிப்பீடுகள் அடங்கிய செபத்தைக் கற்றுக் கொடுக்கின்றார்.

முதலில் நல்லவர்களையும் பெரியோர்களையும் போற்று என கூறுகிறார். இயேசு தந்தையைப் போற்றுகின்றார்.

இன்று நாம் பெரியோர்களை வணங்குகின்றோமா? அவர்களுக்குரிய மரியாதை செய்கிறோமா? அவர்களின் வழிகாட்டுதல்களை ஏற்கின்றோமா? இல்லையே. அதனால் தான் நாம் வாழ்வில் உயர்வை அடைவதில்லை.

ஆம் கண்ணால் காணக் கூடியதெய்வங்களாகிய பெற்றோர்கள், பெரியோர்களைப் போற்றாதவர்கள், காணக் கூடாத கடவுளை எவ்வாறு போற்றமுடியும்.

இரண்டாவது எல்லோருக்கும் உணவு ஆம், இயேசு, தான் வாழ்ந்தகாலத்தில் பசியோடு இருந்த மக்கள் மீது கரிசனையும், அக்கறையும் கொண்டு அவர்கள் பசியாற பகிர்ந்து உண்டார். இதைத்தான் இயேசுவின் அப்பம் பகிர்தல் நிகழ்ச்சியில் பார்க்கின்றோம்.

மூன்றாவது மன்னிப்பதும், தீமையைத் தவிர்ப்பதும் – மன்னிப்பது என்பது இயே சுவின் செபத்தின் இன் னோரு பரிமாணம். இயேசு எல்லோரையும் மன்னியுங்கள் என்று சொன்னார். ‘‘மன்னியுங்கள், மன்னிக்கப் பெறுவீர்கள்’’ அவர் சொன்னதையே தானும் செய்தார்.

மன்னிக்காத போதுதான் தீமைகள் உள்ளத்தில் பெருகுகின்றன. பொறாமை, வஞ்சகம், பகைமை, பழிவாங்குதல் போன்ற தீமைகள் நம்மை வாட்டி வதைக்கின்றன. எனவே எல்லோரையும் மன்னிப்போம் தீமையினின்று நம்மையே காத்துக்கொள்வோம்.

ஆம், மேற்கண்ட அனைத்துப் பாடங்களையும் இயேசு தன் செபத்தின் வழியாக கற்றுக் கொடுக்கிறார். நாமும் செபத்தைக் கற்றுக் கொள்வதோடு அதை வாழ்வாக்கிட அருள்தாரும் என்று செபிப்போம்.

ஜோன் ரொபேர்ட்


ரன்one பாதுகாப்பு
அடகுக்கு வெற்றி வாய்ப்பு
இலங்கையில் முதன்முறையாக யூனியன் வங்கியின் மூலம் உங்களுக்கு அறிமுகப்படுத்தும் பெறுமதியான வெற்றி வாய்ப்பு
ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் அடகு நகைகளை இலவசமாக மீட்டெடுக்க ஒரு சிறந்த வரம்...
ரன்one
ரன் வன
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 100,000/- விலக்கழிப்பு
இரண்டாம் பரிசு:
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 75,000/- விலக்கழிப்பு
மூன்றாம் பரிசு:
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 50,000/- விலக்கழிப்பு
24 கரட் தங்கப் பவுணுக்கு ரூ. 29,000/-
22 கரட் தங்கப் பவுணுக்கு ரூ. 26,500/-
உயர் பாதுகாப்புடன் மிகக் குறைந்த வட்டி
உடனடி சேவைகளுக்காக நாடு பூராகவும் பரந்துள்ள யூனியன் வங்கியின் 19 கிளைகளும் உங்களுக்காக திறந்திருக்கும்.
யூனியன் வங்கி
தொலைபேசி: 011 2370870
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


acer
Empowering People
intel Core i3 inside
சுறுசுறுப்பான வாழ்க்கையை
acer உங்களை இலகுவாக்கும்
acer Aspire 4741
core i3 (Lap Top)
Intel® pentium core i3-350
(213GHZ 1066MHz FSB 3MB L2 cache)
Acer InviLink™
802.11b+g Wi-Fi CERTIFIED™ Solution Bluetooth 2.0 +EDR
Preloded Windows 7 Ultimate
Intel® GL40 Express Chipset
intel 943GML Intergrated 3D Graphics with up to 224MB of video memory
2GB DDR II RAM
320GB HDD
14.1" WXGA colour TFT LCD
DVD Super Multi Double Layer Drive (DVD+/-RW)
5 in 1 Card Reader
One Year International Traveler's Warranty
FREE IP 1300 PRINTER
விசேட சலுகை
Rs. 89,900/=
acer Extensa E270
Intel® Dual Core Processor E5200 (2.5GHz)
1GB DDRII DIMM 667 MHz at PC-5300 Expandable to 4 GB
160GB HDD S-ATA, 7200rpm
DVD Super Multi Double Layer
18.5" wide screen LCD Color Monitor
56K Internal Modem
Internal Card Reader
One Year Warranty
விசேட சலுகை
Rs.56,900/=
acer Multimedia Projector X1161
DLP™ Technology
2,500 ANSI Lumens (Standard),
1.7 Billion Colors
3,000 Hours (Standard)
One Year Local warranty
விசேட சலுகை
Rs.125,000 +
Sri : 0777754811
metropolitan
Powered by the best
Dealer Office: NAVAHALA
200 K.K.S. Road
Jaffina
021 2225461/2, 2224530


யாழ்ப்பாண விவசாய உற்பத்திப் பொருட்களிலான அரிசி மா, உழுத்தம் மா, குரக்கன் மா, மிளகாய்த்தூள் உட்பட பனம் பொருள் உற்பத்திகளான ஒடியல் மா, புளுக்கொடியல் மா மற்றும் கோப்பி ஆகிய அதி நவீன முறையில் பொதி செய்யப்பட்ட தரமான உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
அருந்துங்கள்
அண்ணா
கோப்பி
ANNA COFFEE
ANNA COFFEE
மக்களுக்கு
தெரியும்
50 வருடத்திற்கு
மேலான எமது
சேவையின்
தரம் பற்றி
வளரும் குழந்தைகளுக்கு
ஜீவாகாரம்
ANNA JEEVAKARAM
ANNA INDUSTRY INUVIL
அண்ணா தொழிலகம், இணுவில்.

# இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட்; இலங்கை அணியில் மலிங்க நீக்கம்

(கொழும்பு)

இந்திய அணியுடன் கொழும்பில் நாளை ஆரம்பமாகும் 'இரண்டாவது டெஸ்டில் இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர் லசித் மலிங்க உபாதை காரணமாக விலகியுள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் வந்துள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் காலியில் நடைபெற்றது. இப்போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.


இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் நாளை கொழும்பு எஸ்.எஸ்.சி.மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இப்போட்டிக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இதில் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க உபாதை காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்டு டில்கார பெர்ணான்டோ சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்துடன் முத்தையா முரளிதரன் முதலாவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்றதையடுத்து அவரின் இடத்திற்கு சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் முரளிதரன் ஓய்வுபெற்றதையடுத்து அவர் வகித்த உப அணித் தலைவர்



பதவி முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான இலங்கை அணி விபரம் வருமாறு,

குமார் சங்கக்கார(அணித் தலைவர்), திலகரட்ண டில்சான், தரங்க , பரணவிதாரண, மஹேல ஜெயவர்த்தன, திலான் சமரவீர, அஞ்சலோ மத்யூஸ் , பிரசன்ன ஜெயவர்த்தன, அஜந்த மெண்டிஸ், டில்கார பெர்னாண்டோ, சாணக்க வெலகெதர, சுராஜ் ராண்டீப், ரங்கண ஹேரத், திலின கண்டாம்பி, தம்பிக்க பிரசாத், லகிறு திரி மான்னே, நுவான் பிரடீப்.

# சுயசரிதை புத்தகத்தில் எனது இரத்தம் இல்லை

## சச்சின் டெண்டுல்கர் மறுப்பு

(லண்டன்)

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர். 21 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடி வரும் அவரை பாராட்டும் விதமாக லண்டனிலுள்ள நிறுவனம் சுயசரிதை புத்தகம் வெளியிடுகிறது.

டெண்டுல்கரின் வாழ்க்கை வரலாறு இதில் இடம் பெறும். இதில் விஷேடம் என்னவென்றால் இந்த புத்தகத்தில் டெண்டுல்கரின் இரத்தம் தோய்ந்திருக்கும். அவர் இரத்தத்தில் கையெழுத்திட்டது புத்தகத்தில் இடம் பெறும்.

இந்த விசேட புத்தகம் 10 பிரதிகள் தான் வெளியிடப்படுகிறது. இதன் விலை 37 இலட்சம் இந்திய ரூபாய் ஆகும். டெண்டுல்கரின் இரத்தம் தோய்ந்த புத்தகம் வெளியிடப்படுவது தொடர்பாக கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

இதற்கிடையே சுயசரிதை புத்தகத்தில் எனது இரத்தம் இடம் பெறுவதாக வெளியான தகவல் உண்மை இல்லை என்று டெண்டுல்கர் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

அந்த புத்தகத்தில் எனது இரத்தம் இடம்



பெறவில்லை. அந்த புத்தகம் புகைப்படங்கள் நிறைந்தது. சுயசரிதை கிடையாது. நான் தற்போது விளையாட்டில்தான் அதிக கவனம் செலுத்திவருகிறேன். கடந்த வியாழக்கிழமை தான் எனக்கு இந்த தகவல் தெரிந்தது.

இதில் எந்தவித உண்மையும் இல்லை. இந்த புத்தகம் அறக்கட்டளை உதவிக்காக வெளியிடப்படுகிறது.

வெவ்வேறு விலை களில் இந்த புத்தகம் வெளியாகிறது. இந் தியா முழுவதும் உள்ள நூலகங்களில் இந்த புத்தகம் இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு டெண்டுல்கர் கூறியுள்ளார்.

## சாதித்தார் அணித்தலைவர் சல்மான் பட்

# இரண்டாவது டெஸ்டில் ஆஸியை வீழ்த்தியது பாகிஸ்தான் அணி



பாகிஸ்தான் அணியினர்

(லீட்ஸ்)

அவுஸ்திரேலிய அணியுடனான இரண்டாவது டெஸ்டில் வெற்றிபெற்று பாகிஸ்தான் அணி தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலை செய்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகள் அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 21 ஆம் திகதி லீட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 88 ஓட்டங்கள்எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 258 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்மூலம் முதலாவது இன்னிங்ஸில் 170 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடி 349 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இந்நிலையில் 180 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய நான்காம் நாள் மதிய போசன இடைவேளைக்கு முன் 7 விக்கெட்டுக்களையிழந்தது 180 ஓட்டங்களை குவித்து 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் இம்ரான் பர்காத் 67, அஸார் அலி 51 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பொல்லிங்கர், ஹில்பென் ஹயூஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஜோன்ஸன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:1 என்ற கணக்கில் சமனிலை செய்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகன் விருது பாகிஸ்தான் அணியின் அமீர், அவுஸ்திரேலிய அணியின் வோட்ஷன் ஆகியோருக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது.

**சல்மான் பட் சபாஷ்!**

டெஸ்ட் போட்டிகளில் தொடர் தோல்விகளை சந்தித்துவந்த பாகிஸ்தான் அணிக்கு இவ்வெற்றி பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் இப்போட்டியில் முதன்முறையாக அணித்தலைவர் பதவி வழங்கப்பட்ட பாகிஸ்தான் அணியின் ஆரம்பத்துடுப்பாட்டவீரர் சல்மான் பட்டின் திறமை வெற்றியுடன் ஆரம்பித்தது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கடந்த 15 வருடங்களில் பாகிஸ்தான் அணி டெஸ்ட் போட்டியொன்றில் வெற்றி பெற்றமை இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈழத்தமிழரு...

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த பேரணி இடம்பெற்றது.

பேரணியில் கலந்து கொண்டோர் மெழுகு திரிகளை ஏந்தியபடி தோத்கில் சாலையிலிருந்து விக்டோரியா மலர்சாலை வரை நடந்தார்கள்.

ஐ.நா. சபை, பிரித்தானியா ஆகியன இலங்கையின் யுத்தக் குற்றவாளிகளை விசாரிக்க வேண்டும் என்று கோசங்கள் எழுப்பப்பட்டன.

வேற்று நாட்டவர்களுக்கு ஈழத்தமிழர் அவல நிலையை விளங்கப்படுத்தி துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்த பேரணியைத் தொடர்ந்து சிவந்தனின் ஐ.நாவை நோக்கிய மனித நேய நடைப்பயணத்தின் ஆரம்ப நிகழ்வு இடம் பெற்றது.

இரு நிகழ்வுகளிலும் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரத்தானிய பிரதிநிதிகள அனைவரும் கலந்து கொண்டு சிவந்தனின் நடைப் பயணம் வெற்றிபெற வாழ்த்தினர்.

இந்த நிகழ்வுகளில் பிரித்தானிய தமிழர் பேரவையை சேர்ந்த பல உறுப்பினர்களும், பிரித்தானிய தமிழ் இளையோர் அமைப்பினரும் அதிகளவு கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நிரந்தர...

குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கின் பல பகுதிகளில் நிலையான இராணுவ முகாம்களை அமைக்கும் பணிகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (ந-5)

## டெங்கு...

20 மரணங்களும், தெகிவளை-கல்கிசை மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 25 மரணங்களும் இடம்பெற் றிருக்கின்றன.

இந்நிலையில் தெகிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் கடந்த வாரம் டெங்கு அபாய வலயமாக இருந்திருக்கின்றது.

கொழும்புக்கு அடுத்த படியாக கம்பஹா மாவட்டத்தில் 21 பேரும், யாழ். மாவட்டத்தில் 16 பேரும் பலியாகியிருக்கின்றனர். (ந-5)

## கொழும்பு சிறைச்சாலை...

நடத்தும்போது சிறைக் காவலர்கள் அதைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சிங்கள கைதிகளின் தாக்குதல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த தமிழ்க் கைதிகளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கும் இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன்.செல்வராசா ஆகியோர் புனர்வாழ்வு மற்றும் சிறை சீர்திருத்ததுறை அமைச்சர் டியூ குணசேகர மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் ஆகியோருடன் தொடர்புகொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ஆளும் கட்சி...

விஜயகலா மகேஸ்வரன் சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்படலாம் என ஊடகங்கள் யூகம் வெளியிட்டுள்ளன.

இந் நிலையிலேயே அவர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். (ந-5)

# பொதுமக்களின் கட்டிடங்...

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய இராணுவ முகாமை இராணுவத்தினரிடம் கையளித்து அங்கு நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

நாட்டின் எதிர்கால சவால்களை கவனத்தில் கொண்டே பாதுகாப்பு,உட்கட்டமைப்புக்கள் மேம்படுத்தப்படுகின்றன. அதேபோல வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளும் பாதுகாப்பை கவனத்திற்கொண்டே முன்னெடுக்கப்படுகின்றன.

படையினர்,வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் கண்ணிவெடி அகற்றல், பாலங்கள் நிர்மாணித்தல், நிர்மாணப் பணிகளில் ஈடுபடல் மட்டுமன்றி மனிதாபிமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். அவர்களின் செயற்பாடுகளை கண்காணிக்கின்றபோது மிகக்கூடி விரைவில் பொதுமக்களை குடியமர்த்த முடியும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

68ஆவது படைப்பிரிவிற்கான புதிய கட்டிடம் சகல வசதி வாய்ப்புக்களுடனும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.படையினருக்கான கட்டிடங்களை படையினர் பயன்படுத்துகின்றபோது பொதுமக்களின் கட்டிடங்களில் நிலைகொண்டுள்ள படையினர் வெகுவிரை வில் அங்கிருந்து வெளியேற்றப்படுவதுடன் பொதுமக்கள் அந்த கட்டிடங்களை பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட இக் கட்டிடம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நீண்ட கால பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் நுணுக்கங்களுக்கு அமைவாகவே தொழில்நுட்பரீதியில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

தனியார் கட்டிடங்களிலிருந்து படையினரை அப்புறப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருக்கின்றது. படையினருக்கு புதிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் பணிகளை விடவும் தனியார் கட்டிடங்களிலிருந்து படையினர் வெளியேறும் செயற்பாடுகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

படையினர் தனியார் கட்டிடங்களில் இருந்து அகன்று முகாம்களுக்கு செல்வதனால் தனியார் சமூகத்தினர் அக்கட்டிடங்களை பயன்படுத்தமுடியும் என்பதுடன் பல்வேறு நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் படை அதிகாரிகள் மற்றும் குடும்பங்களுக்காக தனியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும்.திருமணமான படையதிகாரிகள் தங்களுடைய குடும்பத்தினருடன் அங்கு .தங்கியிருந்து பணியாற்ற முடியும் என்றார். (ந-5)

# பண்டாரநாயக்க குடும்பத்தை அரசு உதாசீனம் செய்துள்ளது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் பண்டாரநாயக்க குடும்பத்தை உதாசீனம் செய்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

தனது தாயாரும், உலகின் முதல் பெண் பிரதமருமான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

பொதுமக்களைத் தவிர அரசியல் தலைவர்கள் சிறிமாவோ பண்டாரநாயக்கவை நினைவு கூரத் தவறியுள்ளனர்.

அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சாதனைகளை பாராட்டுவதற்கோ அல்லது நினைவுகூருவதற்கோ அரசாங்கம் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வாறான நடவடிக்கைகள் மிகவும் அருவருக்கத்தக்கது என அவர் தெரிவித்துள்ளார். (ந-5)



கலைமகள் அழகு நிலா
பயிற்சி நிலையம்

35 வயதிற்குட்பட்ட இளம் விதவைகள், தந்தையை இழந்த 20 வயதிற்கு மேற்பட்ட பெண்பிள்ளைகள் அனைவருக்கும் ஏழு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை இடம்பெறும். பயிற்சிக்கு சமுகமளிப்பவர்கள் தங்களது குடும்ப அட்டையைக் கொண்டு சமுகந்தரவும்.சனி ஞாயிறு தினங்களில் பயிற்சிகள் இடம்பெறும்.

பயிற்சிகள்

- ★ Facial (ஏழு வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stratening
- ★ Hair Perming
- ★ Hot oil Massage
- ★ Hair Cutting
- ★ Hair dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure Manicure
- ★ கறுப்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- ★ Bleaching
- ★ Bridal make up (5 வகை)

தொடர்புகள்:
077 3719071
021 4908151

பயிற்சிக்கான கட்டணம்: 4000/=
பயிற்சி ஆரம்பம் : 01/08/2010
பயிற்சி நேரம் : 9.30 மணி - பி.ப.4 மணி வரை

கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

(c-733)



A/L இல் 3 pass உள்ளதா?
2014ல் நீங்களும் ஒரு பொறியியலாளர்
இந்தியாவில் பட்டப்படிப்பு
அரிய வாய்ப்பு
இறுதிச் சந்தர்ப்பம்
எம்மூடாக மட்டுமே



உடனடியாக தொடர்பு கொண்டு உங்கள் அனுமதியை உறுதிப்படுத்துங்கள்

SRI VENKATESWARA COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
Chittoor.
Affiliated to Jawaharlal Nehru Technological University, Anantapur and Recognized by AICTE, New Delhi,

V4 Educational Consultancy(Pvt)Ltd
Head Office- #7-1/1,W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06, 0773867257
Branch- #10 , Palaly Road, Jaffna. 0217200999
Web: http://www.v4edu.com Email: mail@v4edu.com



நீங்களும் கணினி பட்டதாரியாகலாம்

BIT
BIT கொழும்பு பல்கலைகழகம்(வெளிவாரி)
புதிய கல்வியாண்டு 2010 இன் அனுமதிகள் யாழ்ப்பாணத்தில்



- ❖ புதிய கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. முடிவுத்திகதி 31.7.2010
- ❖ A/L இல் 3 பாடங்கள் சித்திபெற்றவர்கள் அல்லது FIT சித்திபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
- ❖ வகுப்புக்கள் English/ Tamil மொழிகளில் எமது நிறுவனத்தில் துறைசார் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் நடாத்தப்படுகின்றன.
- ❖ மேலதிக விபரங்கள் bit.speedit.lk இல்

SPEED IT NET
"Quick Way to Online"
72/28 Panikkar Lane Palaly Road.Thirunelvely, Jaffna
TP: 021 222 8358 www.speedit.lk

(C-731)



Spoken English & Diploma in English

City & Guilds

**Opening the Door to the Modern world**

International English Language Qualifications

City Guilds Offers a wide range of Engilsh Language Qualifications suitable for students and people of all ages engaged in work & business. They develop Speaking , Writing, Reading and Listening skills using real - life examples and tasks from entry to advanced level.



குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற: சரளமாக எந்த சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி.

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், I.N.G.Os மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றிலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பினைப் பெற அரியதோர் பாடநெறி.City & Guilds இன் சான்றிதழ்கள் உலகம் முழுவதும் அங்கீரகாரம் பெற்றவையாகும்.

அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்படும் IELTS பரீட்சை எடுப்பதற்கு முன் City & Guilds இன் Diploma in English பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தினால் IELTS பாடநெறியை மிகவும் இலகுவாகப் பின் பற்றமுடியும்.

புதிய வகுப்புக்கள் 26.07.2010 இல் ஆரம்பம்


The International ESOL Diploma Covers all Four Language Skills, Reading, Writing, Listening and Speaking

| Course Schedule | Non - Tue - Wed- Thu - Fri | Saturday & Sunday |
|---|---|---|
| Duration | 3 Months (100 Hours) | 3 Months (100 Hours) |
| Time | 11.00 a.m. - 1.00 p.m | 11.00 a.m. - 2.00 p.m |
| Commencement | 26.07.2010 | 31.07.2010 |

BRITISH COLLEGE OF ENGLISH
City & Guilds Approved Centre
143, Adiyapatham Road, Thirunelvely. T.P:0213216027 - 0778803887


## மரண அறிவித்தல்

### அமரர் சிவகுரு தேவராசலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு தேவராசலிங்கம் (இ.போ.ச)அவர்கள் நேற்று (24-07-2010) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவகுரு சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மகனும் கந்தையா அன்னம்மா அவர்களின் பாசமிகு மருமகனும் ஆவார்.அன்னார் காலஞ்சென்ற இராசேஸ்வரியின் பாசமிகு கணவரும்,மயூரன்(லண்டன்),கோகிலா,சங்கர் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,அகல்யா (லண்டன்),சுரேஸ்குமார்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்-கல்வித் திணைக்களம்)ஆகியோரின் அன்பு மாமனாரும்,சுப்பிரமணியம்,குமாரசாமி,தங்கம்மா,வள்ளிநாயகி,கந்தசாமி,நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும் கமலேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (இலங்கை மத்திய வங்கி),பேராசிரியர் தேவராஜா (யாழ்.பல்கலைக் கழகம்) ஆகியோரின் மைத்துனரும், கருணேஸ்,அகஷ்யா,அனுஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (25-07-2010) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார் ,உறவினர் ,நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேராசிரியர் க.தேவராஜா
(மைத்துனர்)

தாவடி வடக்கு,
கொக்குவில்.

(C-734)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.